பக்கங்கள் : பதினான்கு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 மார்கழி 27 புதன்கிழமை (11.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :45

# நீதியான தீர்வைப் பெற்றுத்தருவது சர்வதேசத்தின் தலையாய கடமை

## தவறினால் எமது தலைவர் பின்னால் அணிதிரள்வோம்
## நேற்று மூதூர் தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டில் பிரகடனம்

மூதூர், ஜனவரி 11

**எமக்கு நீதியான தீர்வை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது சர்வதேசத்தின் மனிதக் கடமை. அதில் சர்வதேசம் தவறும் பட்சத்தில் நாம் எவ்வித அச்சமும் இன்றி எமது தலைவர் பின்னால் அணி திரள்வோம். மக்கள் படையணி போரிடும் போரிலே எமது இருப்பையும், வாழ்வையும், எமது வாழ்வுக்கான மண்ணையும் காப்போம்.**

**மூதூர் கிழக்கு கடற்கரைச் சேனையில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட தமிழீழப் போராட்டத்தை சர்வதேச உலகிற்கு வெளிப்படுத்தும் பிரகடனத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

திருமலை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரணியின் தலைவர் பொன் இரத்தினசிங்கம் தலைமையில் மாநாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன.

தமிழீழப் போராட்டத்தை சர்வதேச உலகிற்கு வெளிப்படுத்தும் பிரகடனத்தை ஆசிரியர் சோ.பிரபாகர்ன் வாசித்தார்.

பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இனியும் யோசிக்க என்ன இருக்கிறது? ஒன்றுமே இல்லை.ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டியது தான்.அதுதான் சாவுக்குள் வாழ்வை அமைப்பதென்பது.

சாவென்பது எமக்கு வீரச்சாவாக அமைய வேண்டும். வீழ்ந்தவர் நினைவுடன் வீறாக எழுந்து எமது மக்களின் வாழ்வுக்காக எமது மண்ணையும்,எமது இருப்பையும் காப்போம். எத்தனை வருடங்கள் ஏமாற்றப்படுவது? 50

(13ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் இளைஞர் சுட்டுக்கொலை

தென்மராட்சி,ஜன.11

சாவகச்சேரி, டச்சு வீதியில் நேற்றுமாலை 5.45 மணியளவில் ஆயுததாரிகளால் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மீசாலை, வாகையடிச் சந்தியைச் சேர்ந்த ரி.சிவசங்கர் (வயது 28) என்ற இளைஞனே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நகரில் புடைவைக் கடை நடத்திவரும் இவர் கடையைப் பூட்டிவிட்டு வீட்டுக்குச் சென்றவழியில் சுடப்பட்டுள்ளார்.

தலை, வயிற்றுப்பகுதியில் காயங்கள் காணப்பட்டன. (3-117)

## உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திருத்தம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில்

கொழும்பு, ஜன.11

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் 53 உள்ளூராட்சி சபைகளுக்கென 2002 ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்தல் வேட்பு மனுக்களை ரத்துச் செய்துவிட்டு புதிய மனுக்களை கோருவதற்கான உள்ளூராட்சி சபைச் சட்டத்தின் திருத்தம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்

(14ஆம் பக்கம் பார்க்க)



## பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட எழுச்சி மாநாடு

மூதூர்,ஜன.11

மூதூர் கிழக்கு கடற்கரைச் சேனையில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் பல்லாயிரக்கணக்கானோர் உணர்ச்சி பூர்வமாகக் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை வீரவேங்கை இரண்டாம் லெப்டினன்ட் சுபாஜினி, லெப்டினன்ட் சதானந்தன் ஆகியோரின் தந்தை தியாகராசபிள்ளை அருளானந்தம் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை வீரவேங்கை மேஜர் தமிழ்மாறன், துணைப்படைவீரர் குட்டி ஆகியோரின் தந்தை பத்தகுட்டி அரசரத்தினம் ஏற்றிவைத்தார். (14ஆம் பக்கம் பார்க்க)



## சிறுமியை படையினர் இழுத்துச்சென்றனர் என பரவிய செய்தியால் கோண்டாவிலில் குழப்பம்

கோண்டாவில்,ஜன்.11

பாடசாலை மாணவி எனக்கருதப்படும் சிறுமி ஒருத்தியை படையினர் நால்வர் பலவந்தமாக பற்றைக்காட்டுப் பகுதியை நோக்கி இழுத்துச் சென்றனர் என்ற தகவல் பரவியதால் கோண்டாவில், திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுப் பெரும் பரபரப்பும் களேபரமும் ஏற்பட்டன.

சம்பந்தப்பட்ட சிறுமியைத் தேடி பொதுமக்கள் பற்றைக்காட்டை சல்லடைபோட்ட சமயம் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து பொதுமக்களைக் கலைத்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுப்பிற்பகல் 1.30 மணியளவில் திருநெல்வேலி, பாற்பண்ணைப் பகுதிக்கும், கோண்டாவில் கிழக்கு பழைய ஆணித்தொழிற்சாலைப் பகுதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இடம்பெற்றிருக்கிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதா? ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் எதிர்ப்பு

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளைத் தடை செய்ய அதன் உறுப்பு நாடுகள் சில எதிர்ப்புத் தெரிவித்துள்ளன எனஇணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு ஆகக் கூடியதான ஆதாரங்கள் எதுவும் இல்லாத நிலையில் தடைசெய்வது என்பது சரியல்ல என்றும் அந்த நாடுகள் வாதிட்டுள்ளன.

அமைதிப் பேச்சுகளை காரணம் காட்டி ஐரோப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாதப் பட்டியல் தொடர்பான வழிகாட்டுதலை நோர்வே அரசு அண்மையில் நிராகரித்திருந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளுக்கிடையேயும் புலிகளைத் தடை செய்ய எதிர்ப்பு எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது - இப்படி அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்தது.(3)

## தணிக்கை குறித்து அரசு ஆலோசனை?

கொழும்பு, ஜன.11

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் மோதல் சம்பவங்கள் தொடர்பான செய்திகளை தணிக்கை செய்வது குறித்து அரசு ஆலோசனை செய்துவருவதாகத் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்கில் இடம்பெறும் மோதல்கள் தொடர்பான உண்மை நிலையை ஊடகங்கள் வெளியிடுவது நாட்டில் பதற்றத்தை ஏற்படுத்துவதாகவும், இதனால் இவ்வாறான செய்திகளை வெளியிடுவதில் தணிக்கை நடவடிக்கை ஒன்றை அமுல்படுத்துவதில் ஜனாதிபதி கூடுதலான அக்கறை கொண்டிருக்கிறார் எனவும் (14ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டிலிருந்து வன்னிக்கு நேற்றுவரை 3 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்வு

கிளிநொச்சி,ஜன.11

குடாநாட்டில் இருந்து வன்னிக்கு நேற்றுவரை 3 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்து வந்துள்ளவர்களுக்கு இருப்பிடவசதிகள் மற்றும் உணவு வசதிகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுவருகின்றது.

அதேவேளை -

திருகோணமலை மாவட்டத்திலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்தும் 150 தமிழ்க் குடும்பங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளன. பள்ளிக்குடியிருப்பு, வெருகல், ஈச்சிலம்பற்று, கிளிவெட்டி, பாரதிபுரம் ஆகிய பகுதிகளில் இருந்தே மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். (3)

## புலிகளைக் கண்டித்து கூட்டறிக்கை வெளியிடும் ஜே.வி.பியின் யோசனையை மஹிந்த நிராகரிப்பு

கொழும்பு, ஜன. 11

விடுதலைப் புலிகள் நடத்திவரும் தாக்குதல்களைக் கண்டித்துப் புலிகளுக்கு எதிராக அனைத்து அரசியற் கட்சிகளும் கூட்டாகக் கண்டன அறிக்கையொன்றைவிட வேண்டுமென ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ விடுத்த வேண்டுகோள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போதே விமல் வீரவன்ஸவின் இந்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறி விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்திவருகின்றனர் எனத் தெரிவித்து அதைக் கண்டித்தும், அவர்கள் மோச

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## குடாநாட்டில் பாணின் விலை அதிகரிக்கப்படலாம்

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ். குடாநாட்டில் அடுத்த சில தினங்களில் பாணின் விலை அதிகரிக்கப்படலாம் என யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பிறிமா நிறுவனம் மாவின் விலையை மூடைக்கு 30 ரூபாவால் அதிகரித்துள்ளமையால் பாணின் விலையை உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (3-6)





திருநெல்வேலியில் படையினரால் இளம்பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக்குழுவினர் நேரில் விசாரணை நடத்துவதையும், அப்பகுதியில் இளைஞர்கள் பெண்ணைத் தேடி தேடுதல் நடத்துவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# சோதனையிடப் போவதாகக் கூறி வீட்டில் கொள்ளையிட முயற்சி!

## அயலவர்கள் ஒன்றுதிரண்டு கொள்ளையரை விரட்டினர்

யாழ்ப்பாணம்,ஜன.11

சோதனையிடப் போவதாகக் கூறிக்கொண்டு அதிகாலைவேளை வீடு ஒன்றில் சூறையாட கொள்ளையர்கள் மேற்கொண்ட முயற்சி அயலவர்கள் உஷாரடைந்ததால் முறியடிக்கப்பட்டது.

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குச் சமீபமாக - தனியார் மருத்துவ நிலையம் ஒன்றின் அருகே உள்ள - ஒரு வீட்டில் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் இந்தக் கொள்ளை முயற்சி இடம்பெற்றிருக்கின்றது.

முதலில் அருகே உள்ள தனியார் மருத்துவ சிகிச்சை நிலையம் ஒன்றின் கூரையூடாக நுழைந்த் கொள்ளையர் அங்கு மின் விளக்குகளை அடித்து நொறுக்கியுள்ளனர். அங்கு அச்சமயம் எவரும் தங்கியிருக்கவில்லை. அங்கிருந்து மருத்துவர் ஒருவரின் உபகரணங்கள் சிலவற்றை அபகரித்த கொள்ளையர்கள் பின்னர் அருகே உள்ள குறிப்பிட்ட வீட்டின் உள்ளே நுழைந்திருக்கின்றனர்.

வீட்டின் பிரதான வாயில் வெளியே நின்றவாறு "இராணுவத்தினர் வந்துள்ளோம். வீட்டைச் சோதனையிட வேண்டும்" என்று கூறிய கொள்ளையர்கள் குடும்பப் பதிவு அட்டைகளை எடுத்துக்கொண்டு வெளியே வருமாறு வீட்டில் இருந்தோரைப் பணித்துள்ளனர்.

இதனால், வீட்டில் இருந்தோர் பீதியடைந்து கூக்குரல் இட்டுள்ளனர். உடனே வீட்டு வளவினுள் பாய்ந்த கொள்ளையர்கள் வீட்டின் யன்னல் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியிருக்கின்றனர். பின்னர் யன்னல் கிறிலைக் கழற்றி உள்நுழைய முயன்றுள்ளனர். அச்சமயம் மின்சாரம் தடைப்பட்டிருந்த போதும் சிறிதுநேரத்தில் தடைப்பட்டிருந்த மின்சாரம் திடீரென கிடைத்தது. இதனால், வீட்டில் இருந்தோர் மின்குமிழ்கள் அனைத்தையும் ஒளிரச் செய்தனர். ஆயினும் கொள்ளையர்கள் ஒளிர்ந்துகொண்டிருந்த மின்குமிழ்களை எல்லாம் அடித்து நொறுக்கத் தொடங்கினர்.

சாதாரண உடையில் முகத்தை கறுப்புத் துணியினால் மூடிக்கட்டியிருந்த இக்கும்பல், கைகளில் வாள்களையும், கொட்டன்களையும் வைத்துக் கொண்டு மிரட்டியிருக்கின்றனர்.

வீட்டில் உள்ளோர் தொடர்ந்து கூக்குரல் இட்டவாறே கைத்தொலைபேசியின் உதவியுடன் அயலவர்களுக்கு தகவல் கொடுத்து உதவியை நாடினர். நிலைமையைப் புரிந்துகொண்ட அயலவர்கள் கையில் அகப்பட்ட ஆயுதங்களுடன் திரண்டுவந்து கொள்ளையர்களை விரட்ட முயன்றனர். அயலவர்கள் உஷாரடைந்தது கண்டு மிரண்ட கொள்ளையர்கள் அவர்களை வாள்களால் தாக்க முற்பட்டவாறே தப்பியோட முற்பட்டனர். இருப்பினும் கொள்ளையர்களை விரட்டிச் சென்ற அயலவர்கள் அவர்களில் ஒருவரது சைக்கிளை அலவாங்கினால் தாக்கியுள்ளனர். அந்த சைக்கிளைப் போட்டுவிட்டுக் கொள்ளையர்கள் அனைவரும் தப்பிஓடிவிட்டனர். ஆத்திரமுற்ற அயலவர்கள் சைக்கிளை அடித்துச் சேதப்படுத்தினர்.

சுமார் 45 நிமிட நேரம் இந்தக் கொள்ளைக் கும்பல் அப்பகுதியில் தங்கி நின்று கொள்ளைமுயற்சியில் ஈடுபட்டது என்று கூறப்படுகிறது.

குறிப்பிட்ட வீட்டிலும் அருகே உள்ள மருத்துவ நிலையத்திலும் இதற்கு முன்னரும் திருட்டு முயற்சிகள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தடவை அயலவர்கள் துணிந்து உஷாரடைந்து செயற்பட்டதால், பெரும் கொள்ளை தவிர்க்கப்பட்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

## புங்குடுதீவில் திலீபன் மருத்துவமனை அடித்து நொறுக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.11

புங்குடுதீவில் இயங்கிவந்த தியாகி திலீபன் மருத்துவ நிலையம் அடித்துடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் சுகாதார சேவையினர் இந்த மருத்துவ நிலையத்தை மக்கள் நலன்கருதி அமைத்திருந்தனர்.

இந்த வைத்திய நிலையத்தைக் கடற்படையினர் சேதமாக்கினர் என அப்பகுதி பொது மக்கள் தெரிவித்தனர். (3-86)

## மக்கள் அஞ்சலி

தமிழாராட்சி மாநாட்டின் போது உயிர் இழந்த பொதுமக்களுக்கு நேற்றுக் காலையில் பொதுமக்கள் மலர்சாத்தி அஞ்சலி செலுத்தினார்கள். யாழ்ப்பாணம், முற்றவெளியில் அமைந்துள்ள தமிழாராட்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் ஞாபகார்த்த தூபியில் காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு வந்த ஏனைய பொதுமக்களும் அஞ்சலிகளை நிகழ்த்திச் சென்றுள்ளார்கள். (3-17-86)

## சாந்தைக் கிராமத்தில் தேடுதல்

வலி.தென்மேற்கு,ஜன.11

சில்லாலை, சாந்தைக் கிராமம் நேற்று அதிகாலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. இதன்போது வீடுகளில் இருந்தோரின் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டன.

வீதிகளில் சென்றோரும் சோதனை செய்யப்பட்டனர். எனினும் எவ[illegible] கைதுசெய்யப்பட்டதாகத் தெரியவில்லை. (ஐ-135)

## நளினியின் மகள் பேட்டியளிக்கத் தடை

சென்னை,ஜன.11

ராஜீவ்காந்தி கொலையாளி நளினி மகள் மேகரா 3 மாத விசாவில் இந்தியா வந்துள்ளார். இந்தியாவில் தங்கியிருக்கும் காலத்தில் பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுக்கக் கூடாது என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

தங்குமிடத்தை இரகசியமாக வைத்திருக்கவேண்டும். எங்குசெல்கிறோம், யாரைச் சந்திக்கிறோம் போன்ற விவரங்களை மத்திய அரசின் உளவுத்துறைக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற கடுமையான நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த விசா வழங்கப்பட்டுள்ளது. இவற்றை மீறினால் விசாவை ரத்துச் செய்து உடனடியாக இலங்கை திரும்ப உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல்களை நளினியின் வழக்கறிஞர் துரைசாமி தெரிவித்தார். இதற்கிடையில் மகளைப் பார்க்க தன்னை ஒருமாதம் பிணையில் வெளியே விடவேண்டும் என வேலூர் சிறை அதிகாரிகளிடம் நளினி மனுக் கொடுத்துள்ளார். (3-6)

## சடலம் ஒப்படைப்பு

கிணற்றில் வீழ்ந்து இறந்ததாக சந்தேகிக்கப்படும் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் உறவினர்களால் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுமுற்பகல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விதானையார் வீதி, சுண்டுக்குழியைச் சேர்ந்த பஞ்சாட்சரம் சிறிபாலன் (வயது-38) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையின் சடலமே ஒப்படைக்கப்பட்டதாகும்.

இவர் நேற்றுமுன்தினம் இரவு கிணற்றில் வீழ்ந்திருக்கலாம் எனவும் -

நேற்றுக்காலையே இவர் சடலமாக மீட்கப்பட்டார் எனவும் - உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர் யாழ். மாநகரசபை தீயணைக்கும் பிரிவின் சாரதி எனவும் தெரிவிக்கப்பட்டது. (3-12-14-15)

## முதூரில் பொங்கி எழுந்த தமிழ்த்தேசிய எழுச்சியின்போது...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

# தமிழர்கள் அனைவரும் கிரிமினல் சந்தேக நபர்களா?

கொழும்பில் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்களை நித்திரைப் படுக்கையில் வைத்துக் கைதுசெய்து பொலிஸ் நிலையங்களுக்குக் கூட்டிச்சென்று தடுத்துவைத்த 'ஸ்ரேஞ் ஞர்ஸ் நைற்' நடவடிக்கை குறித்து உதவும் நாடுகளின் இணைத் தலைமைகளுக்குக் காதில் பூச்சுற்றுவதுபோல அரசுத் தரப்பில் அளிக்கப்பட்டிருக்கும் விளக்கம், தலைநகர்த் தமிழர்களை மட்டுமல்லாமல், முழுத் தமிழர்களையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்கின்றது.

இதுவிடயத்தில் முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பது போன்ற பதில், அரசின் உயர் தலைவரிடமிருந்து வந்திருப்பது எதிர்பாராத ஒரு விடயமாகும்.

கடந்த 31ஆம் திகதி - வருட இறுதிநாளன்று - அதிகாலை முதல் தலைநகரில் தமிழர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கில் குவிக்கப்பட்ட படையினரும், பொலிஸாரும் தமிழர்களின் வீடுகளைத் தட்டித் திறந்து, உட்புகுந்து, அங்கு நித்திரைப் படுக்கையில் இருந்த இளைஞர், யுவதிகளை பொலிஸ் நிலையங்களுக்கு அள்ளிச் சென்றனர். இளம் பெண்கள் பலர் நித்திரை உடையுடன் வலுக்கட்டாயமாக பொலிஸ் நிலையங்களுக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர். மொத்தத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் அகௌரவப்படுத்தப்பட்டனர்.

தலைநகரில் தங்கியிருந்ததுதான் அவர்கள் செய்த மகா தவறு. அந்தக் குற்றத்துக்காக பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமான அப்பாவித் தமிழர்கள் 'கிரிமினல்கள்' போல நடத்தப்பட்டார்கள்; படம் பிடிக்கப்பட்டார்கள்;வீடியோ முன் நிறுத்தப்பட்டார்கள். கிரிமினல்களின் கைவிரல் அடையாளங்களைப் பதிப்பதுபோல பொலிஸாரினால் அவர்களின் கைவிரல் அடையாளங்கள் பதியப்பட்டன.

பிரிட்டனுக்கு செல்வதற்கு விஸா பெற விண்ணப்பிப்பவரிடம் அந்த நாட்டுத் தூதரகம் கைவிரல் அடையாளத்தைப் பதிவுசெய்யும் விதியைக் கொண்டுவந்தபோது, அது தம்மை அகௌரவப்படுத்தும் செயற்பாடு எனக் கருதி, அந்தஒழுங்கு விதிக்கு எதிராக நீதிமன்றத்துக்குச் சென்றவர் இலங்கை அரசின் இப்போதைய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர. அவர் இந்த அரசில் முக்கிய அமைச்சராக இருந்து, ஒவ்வொரு நாடுகளுக்கும் போய் ஈழத் தமிழர்களின் அரசியல் நிலைப்பாட்டுக்கு எதிராக 'கோயபலாப்' பிரசாரம் செய்ய, மறுபுறத்தில் அவரது அரசு தமிழர்களை வீடுகளிலிருந்து மந்தைகள்போல விரட்டிச்சென்று பொலிஸ் நிலையத்தில் அடைத்து வைத்து, கிரிமினல்கள்போல அவர்களைக் கருதி, அவர்களின் கைவிரல் அடையாளங்களைப் பதிகின்றது.

தேடுதல் நடவடிக்கைகள் நடைபெறாது என யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் 2.12 ஆவது பிரிவு கூறுகின்றது. அதை மீறி, தேடுதல் என்ற பெயரில் தமிழர்களை இம்சிக்கும் இந்தச் செயற்பாடு தலைநகரில் அரங்கேறுகின்றது.

இவ்வளவு கூத்தும் அன்றையதினம் தலைநகரில் நடக்கும்போது இலங்கைக்கு உதவும் நாடுகளின் இணைத் தலைமைகளின் இலங்கைப் பிரதிநிதிகளும் தலைநகரில்தான் இருந்தார்கள். அவரவர்களின் தூதரகங்களினதும் அவற்றின் அவதானிப்புப் பிரிவுகளினதும் கண்ணில் படாமல் போகக் கூடிய விடயம் அல்ல, இவ்வாறு தமிழர்களை மந்தைகளாக நடத்திய செயற்பாடு. அவ்வளவு தூரத்துக்குப் பகிரங்கமாக நடந்த இந்த விவகாரம் குறித்து இணைத் தலைமை நாடுகளின் இலங்கைப் பிரதிநிதிகள் நாட்டின் உயர் தலைவரிடமே - ஜனாதிபதியிடமே - நேரில் கேட்டபோது, இந்த இனப்பாகுபாட்டு நடவடிக்கை குறித்து அவர் அளித்த விளக்கம் என்ன தெரியுமா?

அவரது ஜனாதிபதி செயலக செய்திக் குறிப்பே ஜனாதிபதித் தரப்பு விளக்கத்தை இப்படித் தந்திருக்கின்றது:-

*"போதை வஸ்துப் பாவனையாளர்கள், கும்பல்களைச் சேர்ந்தோர் (Drug traffickers and gangsters) உட்பட கிரிமினல் மூலங்களை இலக்குவைத்து 'சுற்றாடலைத் துப்பரவு செய்யும்' வழமையான சட்ட அமுலாக்க நடவடிக்கையே அது என்று விளக்கமளிக்கப்பட்டது."*

-இவ்வாறு இந்த நாட்டின் ஜனாதிபதி விளக்கியிருக்கின்றார்.

ஆயிரக்கணக்கான இயந்திரத் துப்பாக்கிகளோடும் பல்லாயிரக்கணக்கான கிரிமினல்களோடும் தென்னிலங்கையைக் கலக்கிக் கொண்டிருக்கும் பாதாள உலகக் குழுக்களை மடக்கிப் பிடிக்கக்கூட இவ்வளவு ஆயிரக்கணக்கில் துருப்புகள் குவிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதில்லை.

ஆனால், தலைநகரில் வீடு வீடாகப் புகுந்து, தமிழர்களை நித்திரைப் படுக்கையில் தட்டி எழுப்பி, தமிழர்கள்தான் என்று அவர்களை உறுதிப்படுத்தித் தெரிவுசெய்து, பொலிஸ் நிலையங்களுக்குத் தள்ளிக் கொண்டு போய், தடுத்துவைத்து, கிரிமினல்கள்போல நடத்திவிட்டு இப்போது அந்தச் செயற்பாட்டுக்கு 'கிரிமினல்களை இலக்கு வைத்து சுற்றாடலைத் துப்புரவு செய்யும் வழமையான சட்ட அமுலாக்க நடவடிக்கையே அது' என்று வியாக்கியானம் கூறுகின்றார் நாட்டின் தலைவர்.

தமிழர்கள் அனைவரையும் கிரிமினல் குற்றவாளிகள் என்றே சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் அரசின் இந்தப் போக்கு, இலங்கையில் தமிழர்கள் இனரீதியாகப் பாகுபாடு காட்டப்பட்டு, ஒதுக்கப்பட்டு, அடக்கப்படுகின்றார்கள் என்பதற்கு மற்றொரு பலமான ஆதாரம். அந்த இன ஒதுக்கலுக்கு நாட்டின் தலைவரும் உடந்தையாக இருந்து துணைபோகின்றார் என்பதற்கு மேற்படி இனப்பாகுபாட்டு நடவடிக்கை தொடர்பான உண்மையை மறைத்து அபத்தமான விளக்கம், வியாக்கியானம் அளிக்கும் அவரது செயற்பாடு நல்லதோர் சான்று.

களத்தில் சம்பவங்கள் - தமிழருக்கு எதிரான நடவடிக்கைகள் - ஜனாதிபதிக்குத் தெரியாமல் நடக்கின்றன, அவர் ஒன்றும் அறியாதவர் என்ற சாரப்பட கருத்துக் கூறி ஜனாதிபதியைப் புகழ முனைகின்றவர்களுக்கு, அநீதியை நியாயப்படுத்தி நீதியாக்க முயலும் ஜனாதிபதி மஹிந்தவின் இந்த நடவடிக்கை நல்ல பதிலாக அமையும் என நினைக்கிறோம்.

# நான்காம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்தால் தமிழீழ வான்படையும் தாக்குதல் நடத்தும்

## தளபதி கேணல் பானு சூளுரை



நான்காம் கட்ட ஈழப்போர் எம் மீது திணிக்கப்படுமானால் புலிகளின் ஏனைய படையணிகளுடன் தமிழீழ வான்படையும் இணைந்து தாக்குதல் நடத்தும். இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு.

மட்டக்களப்பு ஈரக்குளம் மக்களுக்கான கிராமியப் படைப் பயிற்சி தொடர்பான ஆரம்பக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது படைக்கட்டமைப்பு வலுவாக இருக்கின்றது. கடற்படை, கரும்புலி என்பதை விட நாலாங்கட்டப் போர் திணிக்கப்படுமானால் நமது வான்படையும் தாக்குதலை மேற்கொள்ளும்.

சிறிலங்கா அரசு எம்மீது யுத்தத்தைத் திணிக்குமாக இருந்தால் அந்த யுத்தத்தில் எவரும் பார்வையாளராக இருக்கக் கூடாது. அனைவரும் பங்காளிகளாக மாறவேண்டும்.

சமாதானத்தை இழுத்தடித்துக் கொண்டு எமது படைப் பலத்தை நலிவடையச் செய்வதே சிறிலங்கா அரசின் நோக்கமாகும். சிறிலங்கா அரசு எதனையும் எமக்குத் தரப்போவதில்லை. நாம் அடித்துத்தான் பெறவேண்டும். அவ்வாறு அடித்துப் பெற்ற நிலம் தான் எம்மிடம் உள்ளது.

விடுதலைப் போராட்டம் ஆரம்பித்ததில் இருந்து இன்று வரை விடுதலைப் போராட்டத்திற்குப் பலமாக இருப்பவர்கள் நீங்கள் தான். அதன் அடிப்படையில் இன்றைய அரசியல் சூழலை உங்களுக்கு விளக்க வேண்டியுள்ளது.

இந்தச் சமாதான காலத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட போராளிகளை நாம் இழந்திருக்கின்றோம். ஆயினும், எமது தலைவர் பொறுத்த பொறுமையின் விளிம்பில் இருக்கின்றார்.

விடுதலைப் புலிகளை தாக்கினால் புலிகள் பொறுத்துக் கொள்வார்கள். தமிழ் மக்களைத் தாக்கினால் தான் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதை உணர்ந்த சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளைச் செய்யும் அதேவேளை, புலிகளே யுத்தத்தை ஆரம்பித்தார்கள் என சர்வதேச சமூகத்திற்கு காட்டும் வகையில் சூழ்ச்சிகளைச் செய்து எம்மை யுத்தத்திற்கு இழுத்து வருகின்றனர்.

ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட மஹிந்த ராஜபக்ஷ சமா தானத்தை ஆரம்பிப்போம் எனக் கூறிக்கொண்டு மறுமுனையில் சிறிலங்காப் படைபலத்தை விருத்தி செய்து வருகின்றனர்.

எமது போராட்டம் ஆயுத பலமின்றிய காலத்தில் உறுதியாக நின்று வளர்ச்சி அடைந்துள்ளது. இன்று மட்டக்களப்பில் மட்டும் 25,000 பேருக்கு ஆயுதம் வாங்கக் கூடிய வகையில் வளர்ச்சி அடைந்து விருட்சமாக நிற்கும் இந்தக் காலத்தில் மக்கள் போராட்டமாக உருவெடுத்து நிற்கின்ற ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. எனவே, அனைவரும் தங்களது அளப்பரிய சேவைகளைச் செய்யவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5000 இராணுவத்தினர் மட்டுமே உள்ளனர். ஆனால், ஐந்து லட்சம் மக்கள் உள்ளனர். நாம் அனைவரும் ஒன்று திரண்டால் ஓரிரு நாள்களில் எதிரிகளை விரட்டி அடித்து எமது மண்ணை மீட்க முடியும். அந்தளவிற்கு எமது இலக்கினை நிறைவேற்றக் கூடிய சிறந்த தலைவரை நாம் பெற்று இருக்கின்றோம்.

சில நாடுகள் தேசியத் தலைவரின் வியூகங்களைக் கண்டு வியந்து நிற்கின்றன. அப்படிப்பட்ட எமது தலைவரது காலத்தில் எமது உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்று சேரவேண்டும் - என்றார். (த)



# இந்தியாவின் பங்களிப்பை புலிகள் எதிர்க்கவில்லை!

## சென்னையில் சந்திரசேகரன் எம்.பி. கருத்து

கொழும்பு,ஜன.11

இலங்கைத் தமிழர்களுடன் கலாசார ரீதியாகவும் இன ரீதியாகவும் தொடர்பு கொண்டுள்ள இந்தியாவுக்கே இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அதிக பொறுப்பு உள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா பங்களிப்பதை விடுதலைப் புலிகளும் எதிர்க்கவில்லை.

எனவே, இலங்கைத் தமிழர்களை இனியும் இந்தியா அந்நியர்களாகக் கருதக்கூடாது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் எம்.பி.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தமிழகத்தின் சென்னையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

இலங்கைத் தமிழர் விவகாரத்தில இந்தியா நேரடியாகப் பங்களித்து இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும்.

இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காண உதவிக் கரம் நீட்டியுள்ள அமெரிக்கா, ஜப்பான் மற்றும் அமைதிப் பேச்சுவார்த்தை மேற்கொண்ட நோர்வே ஆகிய நாடுகளைவிட இந்தியாவிற்கே இவ்விடயத்தில் அதிக பொறுப்பு உள்ளது.

தற்போது இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே அறிவிக்கப்படாத போர் உருவாகியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் இந்தியாவும் தமிழகமும் தமிழர்களது பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிக்காவிட்டால் அது மிகப்பெரிய வரலாற்றுப் பிழையாகக் கருதப்படும்.

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா பங்களிப்பதை விடுதலைப் புலிகள் ஒருபோதும் எதிர்க்கவில்லை. இந்தியாவின் தலையீட்டை அவர்கள் பெரிதும் வரவேற்றனர் - என்றார். (த-203)

### யாழ்.போதனா வைத்தியசாலையில்

# குருதிமாற்று சேவை நிலையத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் கட்டடம்

வடக்குப் பிராந்திய குருதி மாற்று சேவை நிலையத்துக்கென யாழ்.போதனா வைத்தியசாலையில் பல லட்சக்கணக்கான ரூபா செலவில் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜப்பானில் தலைமையகத்தைக் கொண்ட 'ஜெய்கா' நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ள இந்த மாடிக் கட்டடத்தின் கட்டுமானப் பணி அடுத்த மாத முற்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முற்றிலும் நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள இந்நிலையத்திற்கான வசதி வாய்ப்புக்கள் அனைத்தையும் 'ஜெய்கா' நிறுவனமே ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது. சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான இயந்திரங்கள் இதற்கென கொள்வனவு செய்யப்படவுள்ளன.

பிராந்தியக் குருதி மாற்று சேவை நிலையத்தின் ஊடாக இரத்த வங்கிப் பிரிவின் செயற்பாடு மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இக் கட்டடத்தின் கட்டுமானப்பணி இந்த ஆண்டின் நடுப்பகுதியில் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-13)

# ஆங்கில பாடத்தின் நிலை உயர்தர வகுப்பில் மோசம்

கொழும்பு,ஜன.11

கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் ஒரு லட்சத்து 16 ஆயிரத்து 506 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறும் தகுதியைப் பெற்றுள்ளனர். இவர்களில் 74 ஆயிரத்து 397 மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்திபெறவில்லை எனப் பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 544 மாணவர்கள் ஆங்கில பாடத்தில் சித்தியடையவில்லை எனக் கூறப்படுகிறது. அவர்கள் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 75 சதவீதமானோர் ஆவர்.

ஆங்கில பாடத்தில் 2.18 சதவீதமானோரே அதிவிசேடப் பெறுபேற்றைப் பெற்றுள்ளனர்.

மாவட்ட அடிப்படையில் ஆங்கிலப் பாடத்தில் கொழும்பு மாவட்டத்தில் 42.22 சதவீதமானோர் சித்தியடைந்துள்ளனர். அம்பாறை, மொனறாகலை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து தோற்றிய மாணவர்களில் 90 சதவீதமானோர் ஆங்கிலபாடத்தில் சித்தியடையவில்லை. வவுனியா மாவட்டத்தில் 625 மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றினர் எனவும் அவர்களில் 6 மாணவர்கள் மட்டுமே ஆங்கிலப் பாடத்தில் சாதாரண சித்திபெற்றனர் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் 60 பேருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம், ஜன.11

யாழ்.மாநகர சபையின் தற்காலிக சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் 60 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபையின் பிரதம செயலாளரின் அங்கீகாரம் பெற்றே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும் -

இந்நியமனக்கடிதம் உத்தியோக பூர்வமாக நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது எனவும் - யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

இந்நியமனத்தைப் பெற்றுக் கொண்ட ஊழியர்கள் 10 நாள்களுக்குள் தமது பணிகளைத் துரிதப்படுத்தி பல பணிகளைப் பூர்த்திசெய்து தருவதாக உறுதியளித்துள்ளனர் எனவும் -

ஏனைய வேலைப் பகுதி ஊழியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் மேலும் தெரிவித்தார்.(3-12-14)

### நாளை

மார்கழி 28
வியாழக்கிழமை
12.01.2006
திதி: திரயோதசி
பிற்பகல் 01.41 வரை
நட்சத்திரம் : மிருகசீரிடம்
முன்னிரவு : 06.45 வரை
சுபநேரம் : 08.03 - 09.33
ராகுகாலம் : 02.03 - 03.33
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வீழ்ச்சியுற்றவர்கள் மற்றும் பலவீனர்கள் [illegible]ாக பேசுவதற்கு அஞ்சுகிறவர்கள் வெறும் அடிமைகள்.

- ஜே.ஆர். லோவெல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

கடைத் தேவைக்குரிய அனைத்துத் தளபாடங்களும் (தேக்குமரம்) உடன் விற்பனைக்குண்டு தொடர்பு:4590955, 0776923705, 222 8159 (45198)

பெண்களுக்கான புதிய லுமாலா சைக்கிள் மற்றும் கல்லுரல், ஆட்டுக்கல், அம்மி என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779239314 (45184)

ஜேர்மன் சப்போட் 50 நாள்தள் நிரம் பிய பூச்சி நீக்கப்பட்ட குட்டிகளும் சணல் ஆடும் 4½ மாதம் சினை நிரம்பியது. விற் பனைக்கு உண்டு. தொடர்பு:57,K.K.S.Road, கொக்குவில் சந்திக்கும் பூநாறி மடத்திற்கும் இடையில். (45224)

### வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட்டிற்கு அருகில் புதிய வீடு 3 அறை இணைந்த குளியல்றை கொண்டது. முற்றிலும் Tiles பதிக்கப்பட்டது. சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773114791, 0212226379 (45207)

### காணி விற்பனைக்கு

இளவாலையில் வீட்டுடன் கூடிய 7 பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: S.நேரு. 0773292615, 0777575701 (45228)

### நாய் விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் நாய் (பெண்) விற்பனைக்குண்டு. தொடர்பு:அ.நித்தியானந்தன், இணுவில் மேற்கு, பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி, மானிப்பாய் வீதி, இணுவில். (45210)

### தவறிவிட்டது

3ஆம் கட்டை, தூன்னாலை, கரவெட்டி என்ற முகவரியை உடைய சிவனடியான் சிவரூபன் என்பவருடைய தே.அ.அட்டை இல. 831131950V மற்றும் முக்கிய ஆவணங் கள் அடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் கே.கே. எஸ். வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் கீழ்வரும் முகவரியில் ஒப்படைத்து தவவும். மந்தாகினி தொலைத் தொடர்பகம், கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 021 222 3500, 0777170746 (45236)

### கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 11.01.2006 மாலை விநியோகிக்கப்படும். தொடர்பு: றாஜீவ் -ஆனைக்கோட்டைச் சந்தி, ஜீவா - பண்டத்தரிப்பு சில்லாலை, K.P. ஸ்ரோர்ஸ் - இளவாலை, தாரகை- பருத்தித்துறை, றஞ்சித் -517, ஸ்ரான்லி றோட் . P.ரவி- சாவகச்சேரி, றாதா - மாவடி வட்டுக்கோட்டை, மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 2867. (45185)

### வாடகைக்கு

இல.82, கொழும்புத்துறை வீதியில் உள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு: 0779239314 (45193)

இருவர் உள்ள குடும்பத்திற்கு அல் லது பெண்கள் தங்கக்கூடிய அறையும் விறாந்தையும் வாடகைக்கு உண்டு. தொடர்புக்கு: 32, பிரப்பங்குளம்றோட், வண்ணார் பண்ணை. (45222)

### தேவை

சன்ரெல் தொலைபேசி சிறியரக ஜெனறேற்டர் உடன்தேவை. காகிதாதிகள் விற் பனைக் குண்டு.தொ.பே.0776915125 (45205)

### பென்ஸ்கார் விற்பனைக்கு

இங்கிலாந்தில் இருந்து கொண்டு வரப்பட்ட புதிய வெள்ளை நிற பென்ஸ்கார் உடன் விற்பனைக்கு உண்டு.தொடர்பு:S.நேரு *0773292615, 0777575701*

**இல.05,சீகள் கோட், மிலாகிரிய அவனியு, பம்பலப்பிட்டி, கொழும்பு.**

(45229)

### MOBILE SERVICE

Computer Sales & Repairs
web designing, Card & Board designing

*இந்தச் சேவைகள் அனைத்தையும் நம்பிக்கையான முறையில் உடனுக்குடன் உங்கள் இருப்பிடங்களில் இருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்.*
*தொடர்பு: 0773604765, 077664194* (45201)

## தலைமைத்துவ பயிற்சி வகுப்பு

குடத்தனை,ஜன.11

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையில் இன்று புதன் கிழமை சிறுவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி வகுப்பு காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தத் தலைமைத்துவப் பயிற்சி வகுப்பை நவாலி தென்னிந்தியத் திருச்சபையின் குருவண. ஏ.எஸ்.தேவகுணானந்தன் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இது போன்ற தலைமைத்துவ பயிற்சி வகுப்பு தொடர்ந்தும் நடத்தப்படவுள்ளன என்று குடத்தனை தென்னிந்தியத் திருச்சபையின் குரு.வண.ராஜன் றொகான் தெரிவித்தார். (ஒ-78)

## 'ரியூப் லைட்' வெடித்துச் சிதறி மாணவன் காயம்

'ரியூப் லைட்' வெடித்துச் சிதறியதில் கண்ணாடிச் சிதறல்கள் தாக்கி பாடசாலை மாணவன் காயமடைந்தான்.

இச்சம்பவம் அண்மையில் சாவகச்சேரி கல்வயலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ச.சுரேஸ் (வயது-14) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ-117)

## எய்ட்ஸ் விழிப்புணர்வுத் திட்டம்

எய்ட்ஸ் நோய் தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதத்தில் கிராமங்கள்தோறும் வீதி நாடகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. சுகவாழ்வுக்கான பயணங்கள், யு.எஸ். உதவிநிறுவனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் நிதியுதவி யுடன் இந்தத்தெரு நாடகங்கள் நடத்தப்பட்டுவருகின்றன.

உலக எய்ட்ஸ் தினம் கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. இதனையொட்டியே இந்த விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களின் இடைத்தங்கல் முகாம், இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையம் ஆகியவற்றில் இந்தச் செயற்பாடு நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-13)




## வாழ்த்துகின்றோம்

*எமது கழகத்தின் செயலாளரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவரும், அகில இலங்கை சமாதான நீதிவானும் ஆங்கில, சிங்கள ஆசிரியருமான லய்ன் M.P சண்முகநாதன்.J.P*

*அவர்கள் மும்மொழி பெயர்ப்பாளராக 12-12-2005 இல் யாழ். மாவட்ட நீதிமன்ற நீதவான் திரு. R.T.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

(455225)(26-16-19)

**லயன்ஸ் கழகம்,
சாவகச்சேரி.**

## நீங்கிய ஆத்மாவின் ஒருமாத நிறைவு

| வரவு | | நிறைவு |
|---|---|---|
| 07 - 05 - 1932 |  | 12 - 12 - 2005 |

### திருமதி முருகேசு தங்கம்மா

*வாழ்வினை எங்கள் உயர்வுக்காக*
*வாழ்ந்து கழித்த அன்புத் தாயே!*
*வாழ்நாளில் இந்த மண்ணில் நாம்*
*வாழும் வரை உம் நினைவே எம் நினைவாகும்.*

நாச்சிமார் கோயில் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய். *(45234)(32-26-11)*

**பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**



# பிரிவின் நினைவில் ஓராண்டு...

# செல்வராசா தீபன்

## (முகாமைத்துவத்துறை மாணவன் -இறுதிவருடம்)

**தீபனாய்**
**30.12.1979**

**தீபமாய்**
**11.01.2005**

"ஊழியர் தெள்ளியர் ஆயினும்
ஊழ்வினை மெல்ல நுழைந்தே தீரும்"

பல்கலையும் கற்றிருந்தும் நண்பனே – நீ
பல்லாண்டு வாழவில்லையே
காலன் கவர்ந்திடா விடில்– நீ
கால் நூற்றாண்டு கடந்திருப்பாய்
வந்தேன், போனேன் என வறுகிவிட்டாய் பூமிவிட்டு– நாம்
தேறுகிறோம், தேற்றுகிறோம் முடியவில்லை தீபனே.
ஆறிடுமோ, அழிந்திடுமோ அகிலத்தில் உன் நினைவு.

**இறுதி வருட மாணவர்கள்,
முகாமைக் கற்கைகள், வணிகபீடம்,
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**

(45226)(51-16-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர வகுப்புகளை மட்டும் கொண்ட பாடசாலைகளை உருவாக்குவது நல்லதா?

**'கணித, விஞ்ஞான பாடத்துறைகளில் வீழ்ச்சி காட்டும் உயர்தரப் பெறுபேறுக்ள்' என்ற தலைப்பில் கடந்த மாதம் 22ஆம் திகதி வியாழனன்று வெளியாகிய ஆய்வுக் கட்டுரையின் எஞ்சிய பகுதி இது.**

கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணைகள் 6, 7, 8, 9, 10 வலய ரீதியாக மாணவர்கள் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளையும் அட்டவணை 11 மாவட்ட ரீதியாக மாணவர்கள் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளைக்யும் காட்டுகின்றன.

அட்டவணை 12 துறைரீதியாக 10 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைகளின் எண்ணிக்கைகளைக் காட்டுகிறது. அடுத்துவரும் அட்டவணை 13

## ஓர் ஆழமான ஆய்வு

துறைரீதியாக 10இற்கு குறைவான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைகளின் எண்ணிக்கையும் மாணவர்களின் எண்ணிக்கையும் காட்டுகிறது.

அட்டவணை 13இன் அடிப்படையில் 10 இலும் குறைவான மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலைகளை நோக்கினால் சராசரியாக ஒவ்வொரு பாடசாலையிலும் கணிதப் பிரிவில் சராசரியாக 4 மாணவர்களும் விஞ்ஞானப் பிரிவில் சராசரியாக 3.6 மாணவர்களும் கலைப்பிரிவில் சராசரியாக 5.2 மாணவர்களும் வர்த்தகப் பிரிவில் சராசரியாக 4.2 மாணவர்களும் இருந்துள்ளதை அவதானிக்கலாம். அட்டவணை 13இல் காட்டப்பட்டுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களைப் பொருத்தமான வேறு பாடசாலைகளில் அனுமதித்திருப்பதன் மூலம் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்பாடடையச் செய்திருக்கலாம். ஆனால், தனது பாடசாலை மாணவர்களை மாணவர்களின் நலன்கருதி வேறு பாடசாலைகளில் அனுமதிப்பதற்கு எந்தவோர் அதிபரும் விரும்புவதில்லை.

எந்தவோர்அதிபராயினும் தான் கடமை புரியும் பாடசாலையின் வளர்ச்சியைப் பல வழிகளிலும் பகிரங்கப்படுத்துவது இயல்பானதே. தனது சேவைக் காலத்தில் பாடசாலை மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் தனது பாடசாலையில் வகுப்புகளைக் குறைப்பதற்கோ அல்லது பாடசாலையின் வகையை (IAB, IC போன்ற) குறைப்பதற்கோ எந்த அதிபரும் ஆதரவாக இருப்பதில்லை. தனது பாடசாலையின் நிலையைக்குறைந்தபட்சம் முன்பிருந்த நிலையிலாவது வைத்துப் பேணுவதற்குரிய காரணங்களை (காரணங்கள் உண்மைக்குப் புறம்பானவையாகவும் இருக்கலாம்) வெளிப்படுத்தி அதற்குப் பெற்றோர், நலன்விரும்பிகளின் ஆதரவும் இருப்பதாகக் காட்டுவது பெரும்பாலான அதிபர்கள் செயற்படும் விதமாகும். பல்வேறு அழுத்தங்களின் காரணமாக சிலவேளைகளில் கல்வி அதிகாரிகள் சிலரும் இந்த நடவடிக்கைக்குத் துணைபோயுள்ள சம்பவங்களும் கடந்த காலத்தில் நடைபெற்றுள்ளன.இதன் காரணமாகப் பாடசாலைகளை 1 தொடக்கம் 9 வரை வகுப்புகள் கொண்ட பாடசாலைகளாவும் 10 தொடக்கம் 13 வரை வகுப்புகள் கொண்ட பாடசாலைகளாகவும் நடைமுறைப்படுத்தும் பாடசாலை மறுசீரமைப்புத் திட்டம் கடந்த காலத்தில் வெற்றியளிக்கவில்லை. இத்திட்டம் யாழ். மாவட்டத்தில் வெற்றியளித்திருப்பின் க.பொ.த. சாதாரண மற்றும் உயர்தர வகுப்புகளில் ஏற்பட்டுள்ள பல பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் கிடைத்திருக்கக்கூடும்.

கடந்த பல வருடங்களாக யாழ். மாவட்டப் பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையை நோக்கும்போது குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகத் தெரியவில்லை. நகர்ப்புறப் பாடசாலைகளை மாணவர்கள் நாடும் தன்மையே அதிகரித்துக் காணப்படுகிறது.

சில IAB, IC தரப் பாடசாலைகளில் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களில் ஓரிருவரே உயர்தர வகுப்பில் கற்பதற்கான தகைமையைப் பெறுகின்றனர். அவர்கள் தாம் விரும்பிய நகர்ப்புறப் பாடசாலைக்கோ அல்லது வேறு பாடசாலைக்கோ செல்வதற்கு அதிபர்களும் ஆசிரியர்களும் அனுமதிப்பதில்லை. அதிபர்கள் சிலர் தமது பாடசாலையின் IAB, IC தரங்களைத் தக்கவைத்துக் கொள்ளுவதற்காகவும் முதலாந்தரப் பாடசாலையின் அதிபர் என்ற தனது பெயரைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவும் சில மாணவர்களின் எதிர்காலத்தைப் பணயம் வைக்கிறார்கள் எனப் பாதிக்கப்பட்ட மாணவர்களும் அவர்களின் பெற்றோரும் பரீட்சை முடிவுகள் வெளியாகிய பின்னர் தமது கவலையை வெளிப்படுத்தியுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தில் ஓரிரு உதாரணங்களைத் தருவது பிரச்சினைகளை இலகுவாகப் புரிய வைக்கும். தென்மராட்சி வலயத்திலுள்ள மூன்று IAB தரப் பாடசாலைகளைச் சேர்ந்த 66 பேர் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களில் 62 பேர் ஒரு பாடசாலையிலிருந்தும் 4 பேர் ஏனைய இரு பாடசாலையிலிருந்தும் பரீட்

(08ஆம் பக்கம் பார்க்க)

**விவரன்**

### க.பொ.த. (உ./த) 2005 பெறுபேறுகள் யாழ். மாவட்டம் (வலய ரீதியாக)

யாழ். வலயம் — முதலாம் முறைதோற்றியோர்

| பிரிவு | தோற்றியோர் | 3 பாடங்கள் சித்தி | 1 அல்லது 2 பாடங்கள் சித்தி | 3 பாடங்களிலும் சித்தியின்மை | தோற்றியோர் (சதவீதம்) | 3 பாடங்கள் சித்தி (சதவீதம்) | 1 அல்லது 2 பாடங்கள் சித்தி (சதவீதம்) | 3பாடங்களிலும் சித்தியின்மை (சதவீதம்) | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணிதம் | 351 | 137 | 93 | 121 | 19.25 | 39.30 | 26.50 | 34.47 | 134 |
| விஞ்ஞானம் | 309 | 141 | 112 | 56 | 18.95 | 45.63 | 36.25 | 18.12 | 141 |
| கலை | 703 | 498 | 166 | 39 | 38.56 | 70.84 | 23.61 | 5.55 | 460 |
| வர்த்தகம் | 460 | 314 | 97 | 49 | 25.23 | 68.26 | 21.09 | 10.65 | 310 |
| மொத்தம் | 1823 | 1090 | 468 | 265 | 100.00 | 59.79 | 25.67 | 14.54 | 1045 |

அட்டவணை 6

தென்மராட்சி வலயம் — முதலாம் முறை தோற்றியோர்

| பிரிவு | தோற்றியோர் | 3 பாடங்கள் சித்தி | 1 அல்லது 2 பாடங்கள் சித்தி | 3 பாடங்களிலும் சித்தியின்மை | தோற்றியோர் (சதவீதம்) | 3 பாடங்கள் சித்தி (சதவீதம்) | 1 அல்லது 2 பாடங்கள் சித்தி (சதவீதம்) | 3பாடங்களிலும் சித்தியின்மை (சதவீதம்) | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணிதம் | 45 | 21 | 12 | 12 | 10.49 | 46.67 | 26.67 | 26.67 | 21 |
| விஞ்ஞானம் | 21 | 14 | 06 | 01 | 4.90 | 66.67 | 28.57 | 4.76 | 14 |
| கலை | 291 | 210 | 69 | 12 | 67.83 | 72.16 | 23.71 | 4.12 | 198 |
| வர்த்தகம் | 72 | 48 | 19 | 05 | 16.78 | 66.67 | 26.39 | 6.94 | 48 |
| மொத்தம் | 429 | 293 | 106 | 30 | 100.00 | 38.30 | 24.71 | 6.99 | 281 |

அட்டவணை 07

தீவக வலயம் — முதலாம் முறை தோற்றியோர்

| பிரிவு | தோற்றியோர் | 3 பாடங்கள் சித்தி | 1 அல்லது 2 பாடங்கள் சித்தி | 3 பாடங்களிலும் சித்தியின்மை | தோற்றியோர் (சதவீதம்) | 3 பாடங்களில் சித்தி (சதவீதம்) | 1 அல்லது 2 பாடங்கள் சித்தி (சதவீதம்) | 3பாடங்களிலும் சித்தியின்மை (சதவீதம்) | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணிதம் | 06 | 03 | 01 | 02 | 6.00 | 50.00 | 16.67 | 33.33 | 03 |
| விஞ்ஞானம் | 0 | 0 | 0 | 0 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0 |
| கலை | 60 | 45 | 15 | 0 | 60.00 | 75.00 | 25.00 | 0.00 | 42 |
| வர்த்தகம் | 34 | 26 | 05 | 03 | 34.00 | 76.47 | 14.71 | 8.82 | 25 |
| மொத்தம் | 100 | 74 | 21 | 05 | 100.00 | 74.00 | 21.00 | 5.00 | 70 |

அட்டவணை 08

வடமராட்சி வலயம் — முதலாம் முறை தோற்றியோர்

| பிரிவு | தோற்றியோர் | 3 பாடங்கள் சித்தி | 1 அல்லது 2 பாடங்களில் சித்தி | 3 பாடங்களிலும் சித்தியின்மை | தோற்றியோர் (சதவீதம்) | 3 பாடங்களில் சித்தி (சதவீதம்) | 1 அல்லது 2 பாடங்களில் சித்தி (சதவீதம்) | 3பாடங்களிலும் சித்தியின்மை (சதவீதம்) | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணிதம் | 160 | 66 | 34 | 60 | 19.73 | 41.25 | 21.25 | 37.50 | 62 |
| விஞ்ஞானம் | 73 | 32 | 30 | 11 | 9.00 | 43.84 | 41.10 | 15.07 | 32 |
| கலை | 419 | 320 | 79 | 20 | 51.66 | 76.37 | 18.85 | 4.77 | 302 |
| வர்த்தகம் | 159 | 90 | 44 | 25 | 19.61 | 56.60 | 27.67 | 15.72 | 87 |
| மொத்தம் | 811 | 508 | 187 | 116 | 100.00 | 62.84 | 23.06 | 14.30 | 483 |

அட்டவணை 09

வலிகாம வலயம் — முதலாம் முறை தோற்றியோர்

| பிரிவு | தோற்றியோர் | 3 பாடங்கள் சித்தி | 1 அல்லது 2 பாடங்களில் சித்தி | 3 பாடங்களிலும் சித்தியின்மை | தோற்றியோர் (சதவீதம்) | 3 பாடங்களில் சித்தி (சதவீதம்) | 1 அல்லது 2 பாடங்களில் சித்தி (சதவீதம்) | 3பாடங்களிலும் சித்தியின்மை (சதவீதம்) | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணிதம் | 125 | 40 | 31 | 54 | 11.26 | 32.00 | 24.80 | 43.20 | 40 |
| விஞ்ஞானம் | 91 | 34 | 27 | 30 | 8.20 | 37.36 | 29.67 | 32.97 | 33 |
| கலை | 633 | 438 | 169 | 26 | 57.03 | 69.19 | 26.70 | 4.11 | 403 |
| வர்த்தகம் | 261 | 168 | 59 | 34 | 23.51 | 64.37 | 22.61 | 13.03 | 166 |
| மொத்தம் | 1110 | 680 | 286 | 144 | 100.00 | 61.26 | 25.77 | 12.97 | 842 |

அட்டவணை 10

யாழ். மாவட்டம் — முதலாம் முறை தோற்றியோர்

| பிரிவு | தோற்றியோர் | 3 பாடங்களில் சித்தி | 1 அல்லது 2 பாடங்களில் சித்தி | 3 பாடங்களிலும் சித்தியின்மை | தோற்றியோர் (சதவீதம்) | 3 பாடங்களில் சித்தி (சதவீதம்) | 1 அல்லது 2 பாடங்களில் சித்தி (சதவீதம்) | 3பாடங்களிலும் சித்தியின்மை | பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணிதம் | 687 | 267 | 171 | 249 | 16.08 | 38.86 | 24.89 | 36.24 | 260 |
| விஞ்ஞானம் | 494 | 221 | 175 | 98 | 11.56 | 44.74 | 35.43 | 19.84 | 220 |
| கலை | 2106 | 1511 | 498 | 97 | 49.29 | 71.75 | 23.65 | 4.61 | 1405 |
| வர்த்தகம் | 986 | 646 | 224 | 116 | 23.08 | 65.52 | 22.72 | 11.76 | 636 |
| மொத்தம் | 4273 | 2645 | 1068 | 560 | 100.00 | 61.90 | 24.99 | 13.11 | 2521 |

அட்டவணை 11

அடுத்ததாகத் துறைரீதியாக 10 மாணவர்களுக்குக் கூடுதலானோர் தோற்றிய பாடசாலைகளை வேறாகவும் துறைரீதியாகவம் 10 மாணவர்களுக்குக் குறைவானோர் தோற்றிய பாடசாலைகளை வேறாகவும் அப்பாடசாலைகளிலிருந்து தோற்றிய மாணவர் தொகையுடன் அட்டவணைப்படுத்துவோம்.

10இற்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றி பாடசாலைகளின் தொகை

| | கணிதம் | | விஞ்ஞானம் | | கலை | | வர்த்தகம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வலயம் | பாடசாலைகளின் தொகை | மாணவர்களின் தொகை | பாடசாலைகளின் தொகை | மாணவர்களின் தொகை | பாடசாலைகளின் தொகை | மாணவர்களின் தொகை | பாடசாலைகளின் தொகை | மாணவர்களின் தொகை |
| யாழ்ப்பாணம் | 09 | 332 | 09 | 297 | 21 | 673 | 11 | 425 |
| தென்மராட்சி | 01 | 41 | 01 | 21 | 09 | 280 | 01 | 50 |
| தீவகம் | 0 | 0 | 0 | 0 | 04 | 47 | 01 | 14 |
| வடமராட்சி | 05 | 135 | 03 | 49 | 14 | 398 | 07 | 138 |
| வலிகாமம் | 05 | 85 | 01 | 22 | 20 | 609 | 10 | 209 |
| யாழ்.மாவட்டம் | 20 | 593 | 14 | 389 | 68 | 2007 | 30 | 836 |

அட்டவணை 12

10இற்கு மேற்பட்ட மாணவர்கள் தோற்றி பாடசாலைகளின் தொகை

| | கணிதம் | | விஞ்ஞானம் | | கலை | | வர்த்தகம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வலயம் | பாடசாலைகளின் தொகை | மாணவர்களின் தொகை | பாடசாலைகளின் தொகை | மாணவர்களின் தொகை | பாடசாலைகளின் தொகை | மாணவர்களின் தொகை | பாடசாலைகளின் தொகை | மாணவர்களின் தொகை |
| யாழ்ப்பாணம் | 06 | 19 | 06 | 12 | 05 | 30 | 09 | 35 |
| தென்மராட்சி | 02 | 04 | 02 | 0 | 02 | 11 | 05 | 22 |
| தீவகம் | 03 | 06 | 03 | 0 | 04 | 13 | 03 | 20 |
| வடமராட்சி | 04 | 25 | 06 | 24 | 03 | 21 | 05 | 21 |
| வலிகாமம் | 08 | 40 | 12 | 69 | 05 | 24 | 11 | 52 |
| யாழ்.மாவட்டம் | 23 | 94 | 105 | 105 | 19 | 99 | 33 | 150 |

அட்டவணை 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மாநகர சபை
# ஆதனவரி அறிவித்தல் - 2006

**மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 252ஆம் அத்தியாயத்தின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபை பின்வருமாறு முடிவு செய்துள்ளமை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.**

01. அடுத்துத் திருத்தியபடியான முற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 238ஆம் பிரிவின் நியதிப்படி 2005ஆம் ஆண்டுக்கான பெறுமதி மதிப்பீட்டை அல்லது ஆதன மதிப்பீட்டைக் குறிப்பிட்ட விடயங்களில் அவசியமெனக் கருதப்படக்கூடியதாக அத்தகைய திருத்தங்களுடன் 2006ஆம் ஆண்டிற்கான மதிப்பீடாக அல்லது ஆதன வரி மதிப்பீடாக ஏற்றுக்கொள்ளுதல்.

02. அடுத்து திருத்தியபடியான முற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 238ஆம் பிரிவின் நியதிப்படி யாழ்ப்பாணம் மாநகரசபைப் பரிபாலன எல்லைக்குட்படும் சகல வீடுகள் ஒவ்வொரு விவரணத்தையும் கொண்ட கட்டடங்கள், சகல காணிகள், குடிமனைகள் எதனதும் வருடாந்தப் பெறுமதியின் மீது 2006ஆம் ஆண்டிற்கு பின்வரும் வீதங்களை உண்டு பண்ணவும் விதிக்கவும்.

அ. 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம், 10ஆம், 11ஆம், 12ஆம், 13ஆம், 14ஆம், 15ஆம், 16ஆம், 17ஆம், 18ஆம், 22ஆம், 23ஆம், வட்டாரங்களில் 12 சதவீதத்திற்கான (பன்னிரெண்டு சதவீதம்) ஒரு விகிதம்.

ஆ. 19ஆம், 20ஆம், 21ஆம் வட்டாரங்களில் 18 சதவீதத்திற்கான (பதினெட்டுச் சதவீதம்) ஒரு விகிதம்.

இ. நீர்ச்சேவையால் பயனடையும் ஆதனங்களுக்கு பந்தி 2. அ, ஆ இல் சொல்லப்பட்ட வீத வரிகளுக்கு மேலதிகமாக 2 சதவீதத்திற்கான (இரண்டு சதவீதம்) ஒரு விகிதம்.

03. அ. மேற்கூறப்பட்ட வீத வரிப்பணங்கள் யாவையும் நான்கு சம கந்தாயத் தவணைகளில் 2006ஆம் ஆண்டு முறையே மார்ச் 31, யூன் 30, செப்ரெம்பர் 30, டிசெம்பர் 31 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படவேண்டும்.

ஆ. 2006ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் நாளில் அல்லது அதற்கு முன்னர் வருடாந்த வீதவரி முழுமையாகச் செலுத்தப்பட்டால் ஒரு 10% (பத்து சதவீதம்) வீதம் கழிவு அனுமதிக்கப்படும் என்பதுடன் வீதவரி வருமதியாகவுள்ள அந்தக் கந்தாயத்திற்குரிய முதல் மாதத்திற்குள்ளாக கந்தாயவரி செலுத்தப்பட்டால் ஒரு 5% (ஐந்து சதவீதம்) கழிவு அனுமதிக்கப்படும்.

04. மேற்கூறப்பட்ட பந்தி 3. அ, இல் சொல்லப்பட்ட காலங்களில் குறித்த வீத வரிகளைச் செலுத்தாதவிடத்து வெறும் காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% (பதினைந்து சதவீதம்) இலும் மற்றும் ஏனைய இடங்கள் மீது 20% (இருபது சதவீதம்) இலுமான விறாந்துச் செலவு அறவிடப்படும்.

*மாநகர சபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்,*
*2006.01.05* (த-47286)(21.16.15.32)

**சீ.வீ.கே.சிவஞானம்,**
*யாழ்.மாநகர ஆணையாளர்.*

## அரங்க வள நிலையம்
Theatre Resource Centre

செயல்திறன் அரங்க இயக்கம் 2006ம் ஆண்டு அரங்க வள நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இப் பயிற்சி நிலையத்தில் நாடக அரங்கப் பயிற்சிகள் ஆரம்பமாக உள்ளன.

G.C.E O/L மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சி

**நாடகத்தை ஒரு பாடமாகப் பயிலுவோர் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். பயிற்சி பாடத்திட்டத்தின் செயல்முறைச் செயற்பாட்டின் அடிப்படையில் அமையும்..**

G.C.E A/L மாணவர்களுக்கான நாடக அரங்கப் பயிற்சி

**உயர்தரத்தில் நாடகத்தைப் பயிலுவோர் இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம். பாடத்திட்டத்தின் செயல்முறை அடிப்படையில் பயிற்சி அமையும்.**

**சனி, ஞாயிறு தினங்களிலும், கிழமை நாள்களில் மாலை நேரத்திலும் பயிற்சிகள் நடைபெறும்.**

விண்ணப்ப முடிவு திகதி **20.01.2006**


பயிற்சிகள் நடைபெறும் இடம்:

**செயல்திறன் அரங்க இயக்கம்,**
**அருளகம், ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் மேற்படி முகவரியில் உள்ள எமது அலுவலகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை தொடர்பு கொள்ளலாம். (சி-47296)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் *13 - 07 - 1933*



மறைவு *24 - 12 - 2004*

**அமரர் கணபதிப்பிள்ளை குணசிங்கம்**

திதி: திரியோதசி (11.01.2006)

**எம்மை அன்புடனும் பண்புடனும்**
**வளர்த்து வையகத்தின் நற்பிள்ளைகளாய்**
**வாழ வைத்த எங்கள் அப்பாவுக்கு**
**முதலாவது நினைவு அஞ்சலியை ஆராதிக்கின்றோம்**

**மணல்தறை ஒழுங்கை,**
**கந்தர்மடம்.**

**பிள்ளைகள்.**

(45200)(21.16.15)

## கொங்கிறீற் கற்கள் விற்பனை

தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊற விட்டு விற்பனை செய்யப்படுகிறது. 1அடி நீளம், 4'' அகலக் கல்லின் விலை ரூபா 26/- மட்டும். நேரடியாகப் பார்வையிட்டுப் பெற்றுச் செல்லவும்.

இடம்:- **VNC**

**கும்பளாவளைப் பிள்ளையார் கோயில் அருகில்**
**அளவெட்டி மத்தி, அளவெட்டி.**

(45204) (21.16.15)

## HIGH SPEED INTERNET BROWSING

**நல்லைக் கந்தன் நெற் கபே**

OPEN : 9.00 a.m. TO 11.00 p.m.

**62, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தொ.பே. 021 222 2779**

(ஏ-47154)

## ஞானோதயா அக்கடமி
## A / L 2008
சங்கத்தானை, சாவகச்சேரி

* ***வழமையான ஆசிரியர் குழு***
* ***கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான***

பிரிவுகள் ஆரம்பம்

**15.01.2006 ஞாயிறு 11 மணி**

(45173) (39.16.15)

### இன்று மணல் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.11

நேற்றையதினம் மணல் விநியோகத்திற்கெனப் பதிவு செய்த அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இன்று புதன் கிழமை மணல் விநியோகம் நடைபெறும் என்று வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனத்தின் மணல் விநியோகப்பகுதி அறிவித்துள்ளது.

(ஐ-202)

### அந்தோனியார் ஆலயத்திலும் பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.11

புங்குடுதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை தைப் பொங்கல் பெரு விழா கொண்டாடப் படவுள்ளது.

ஆன்மீக வழிகாட்டி அருட்திரு அ.இம்மனுவேல் (ஓ.எம்.ஐ) அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ள விழாவில் ஆலய முன்றிலில் அதிகாலையில் நன்றிப் பொங்கல் பொங்கப்படும். காலை 7 மணிக்கு நன்றித் திருப்பலி இடம் பெறும்.

(ஐ-202)

### அறநெறிப் பரீட்சை

தென்மராட்சி,ஜன.11

சாவகச்சேரி, டச்சு வீதி ஸ்ரீபழனி ஆண்டவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு இந்து சமய விவகார திணைக்களத்தினால் பரீட்சை நடத்தப்பட்டது.

அறநெறிப் பாடசாலையில் கற்கும் தரம் ஒன்று தொடக்கம் ஜி.சீ.ஈ உயர் தரம் வரையான மாணவர்களுக்கு கடந்த ஆறாம் திகதி பரீட்சைகள் நடைபெற்றன என்று அறநெறிப் பாடசாலை அதிபர் திருமதி உ. [illegible] தெரிவித்தார்.

(ஐ-117)

## சிறுவர்களுக்கான கலைப் பயில்களம்
Children fine arts training centre

8 வயது தொடக்கம் 12 வயது வரை உள்ள சிறுவர்களுக்கான நுண்கலைப் பயிற்சிப் பயிலகம் ஒன்று செயல்திறன் அரங்க இயக்கத்தால் இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதில் பின்வரும் கலைகளில் பயிற்சி பெற விரும்புபவர்கள் இணைந்து பயிற்சிகளைப் பெறலாம் பயிற்சிகள் வடஇலங்கை சங்கீத சபைப பரீட்சையில் தோற்றக் கூடியதாக வழங்கப்படும்.

பயிற்சிக்கான கலைகள்

- **நாடகம்**
- **மிருதங்கம்**
- **நடனம்**
- **வாய்ப்பாட்டு**
- **மேலைத்தேச இசைக்கருவியான ரம்ஸ்**

கலைப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும் நாள்கள்:

**சனி, ஞாயிறு, மற்றும் கிழமை நாள்களில்(மாலை நேரம்)**

பயிற்சிகள் நடைபெறும் இடம்:

**செயல்திறன் அரங்க இயக்கம்**
**அருளகம், ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

மேலதிக விவரங்களை பெற்றுக்கொள்ள விரும்பின் மேற்படி முகவரியில் உள்ள எமது அலுவலகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை தொடர்பு கொள்ளலாம். (சி-47297)

# பணிநிலை வேண்டுகை
## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
### The Refugees Rehabilitation Organisation (TRRO)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 2006ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்காக நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ள புனர்வாழ்வுத் திட்டங்களில் உள்ள பின்வரும் பதவிகளுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.0 திட்ட இணைப்பாளர் - (ஒப்பந்த அடிப்படையிலானது)**

வேண்டப்படும் தகைமை

- ✓ க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் / உயர்கல்விச் சான்றிதழ்
- ✓ மூன்று வருட சமூக சேவை அனுபவம்
- ✓ ஆங்கிலத்தில் அறிக்கை எழுதும் திறனும் தொடர்பாடல் திறனும்
- ✓ வயதெல்லை 25-30
- ✓ மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்
- ✓ திட்டவரைவு நடைமுறைப்படுத்தல் பற்றிய அறிவு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

கொடுப்பனவு - 18,000/- (மாதாந்தம்)

**2.0 திட்ட உத்தியோகத்தர் - வாழ்வாதாரத் திட்டம் (ஒப்பந்த அடிப்படையிலானது)**

வேண்டப்படும் தகைமை

- ✓ க.பொ.த. உயர் தரத்தில் சித்தியடைந்திருத்தல் / உயர்கல்விச் சான்றிதழ்
- ✓ இரண்டு வருட சமூக சேவை அனுபவம்
- ✓ மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்
- ✓ திட்ட அமுல்படுத்தல், வரைபு தொடர்பான அறிவு/முன்னனுபவம்

கொடுப்பனவு - 14,000/- (மாதாந்தம்)

**3.0 திட்ட உத்தியோகத்தர் - தொழில் பயிற்சி (ஒப்பந்த அடிப்படையிலானது)**

வேண்டப்படும் தகைமை

- ✓ க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல்/தொழில் நுட்பக்கல்விச் சான்றிதழ்
- ✓ இரண்டு வருட சமூக சேவை அனுபவம்
- ✓ திட்ட அமுல்படுத்தல், வரைபு தொடர்பான அறிவு/முன்னனுபவம்
- ✓ மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்

கொடுப்பனவு 14,000/- (மாதாந்தம்)

**4.0 கள உத்தியோகத்தர்கள் (03 எண், ஒப்பந்த அடிப்படையிலானது)**

வேண்டப்படும் தகைமை

- ✓ க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல்
- ✓ மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்
- ✓ ஒரு வருட முன்னனுபவம்

கொடுப்பனவு - 8,500/- (மாதாந்தம்)

**5.0 திட்ட ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர்/செய்தி இதழ் ஆசிரியர் (ஒப்பந்த அடிப்படையிலானது)**

வேண்டப்படும் தகைமை

- ✓ க.பொ.த. உயர்தரத்தில் தமிழ் சிறப்புச் சித்தி / உயர்கல்விச் சான்றிதழ்
- ✓ பத்திரிகைத் துறை அனுபவம் / பயிற்சி
- ✓ ஆங்கிலத்தில் அறிக்கை எழுதும் திறனும் தொடர்பாடல் திறனும்
- ✓ மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்

கொடுப்பனவு - 12,000/- (மாதாந்தம்)

**6.0 களஞ்சிய உத்தியோகத்தர் (ஒப்பந்த அடிப்படையிலானது)**

வேண்டப்படும் தகைமை

- ✓ க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல்/தொழில்நுட்பக் கல்வியில் கணக்கியல் சான்றிதழ் தர கற்கைச் சான்றிதழ்
- ✓ 2 வருட முன்னனுபவம்

கொடுப்பனவு - 9,000/- (மாதாந்தம்)

விண்ணப்ப முடிவுதிகதி - 28-01-2006

*விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி*

**தலைவர்,**
**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,**
**106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.**

(சி/47294) (சி/47294)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியின் குழுவைச் சந்திக்க வசதிசெய்க!

யாழ்ப்பாணம்,ஜன.11

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமை தொடர்பாக ஆராய்வதற்குக் குழு ஒன்றை நியமித்து அவர்களோடு நிலைமையை நேரில் ஆராய்வதற்கு வசதி செய்து தாருங்கள்.

மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் இக்குழுவைச் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் மேற்கண்டவாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பான கடிதம் ஒன்று தொலைநகல் மூலம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், கொலைகள் மற்றும் தாக்குதல் சம்பவங்களும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. தாக்குதல்களின் பின்னர் இராணுவத்தினர் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதுடன் கண்டபடி தாக்குகின்றனர். அத்துடன் காரணமின்றி இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர். அத்துடன், மீன்பிடித்தடை காரணமாகப் பெருமளவான கடற்றொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக உடனடியாக ஆராய வேண்டியுள்ளது.

புலிகள் தரப்பும் அரச தரப்பும் உடனடியாகச் சந்தித்துப் பேசி ஓர் இணக்க நிலைக்குவருவதே பதற்ற நிலைமையைத் தணிப்பதற்கு ஒரே வழி.

ஜனாதிபதி இதற்காக ஒருகுழுவை நியமித்து, அதனைக் குடாநாட்டு மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்துதரவேண்டும். இந்தச் சந்திப்பை அடுத்துவரும் ஒரு வார காலத்துக்குள் நடத்துவதே சிறந்தது. அதற்கான நடவடிக்கைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேற்கொள்ள வேண்டும் என யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள தொலைநகலில் கோரியுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் வெளிநாட்டுத் தூதரகங்கள், கண்காணிப்புக் குழு, மனித உரிமைகள் ஆணைக் குழு ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(ஐ-8)

## மரத்தில் தொங்கிய சடலம்

தென்மராட்சி,ஜன.11

இரவு உணவு அருந்திவிட்டு படுக்கைக்குச் சென்றவர் மறுநாள் காலையில் மரமொன்றில் கயிற்றில் தொங்கிய நிலையில் சடலமாகக் காணப்பட்டார்.

இச்சம்பவம் திங்களன்று சரசாலை தெற்கில் இடம்பெற்றது.

சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த கந்தையா கிருஷ்ணானந்தன் (வயது48) என்பவரே மரணமானவராவார்.

(ஐ-117)

## யாழ். பொலீஸ் நிலைய சுற்றாடலில் வீதித்தடை

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ். பொலீஸ் நிலையப் பகுதியூடாகச் செல்லும் வீதிகள் அனைத்தும் நேற்றுமுன்தினம் மூடப்பட்டன. இதனால் அப்பகுதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டது.

பொலீஸ் நிலையத்துக்குச் செல்லும் அனைத்து வீதிகளும் முட்கம்பி போட்டு மூடப்பட்டிருந்தன.

மூடப்பட்ட இடங்களில் ஒருவர் நடந்து செல்வதற்கு அளவான இடைவெளி மட்டுமே விடப்பட்டிருந்தது.

அத்துடன், பொலீஸ் நிலையத்தின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

வீதிகள் மூடப்பட்டதன் காரணமாக அப்பகுதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது. (ஐ-8-7)

## மானிப்பாயில் பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.11

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நடத்தும் தைப்பொங்கல் பெருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் கா.கணேசதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த விழாவில் முதன்மை விருந்தினராக சைவபரிபாலன சபைத் தலைவர் கலாநிதி வ. கந்தசாமி கலந்து கொள்வார்.

விழாவை முன்னிட்டு மாணவர்களிடையே நடத்தப்பட்ட திருவாக பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன.

நிகழ்வில் கூட்டுவழிபாடு, விசேட பூசை வழிபாடுகள், கலை நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

(ஐ-202)

## இளையோர் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.11

அபிவிருத்திக்கான சமூக அமைப்புகளின் வலையமைப்பு (SOND) நிறுவனம் ஆழிப்பேரலை அனர்த்தத்தின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இளையோருக்கான பயிற்சிமுகாம் ஒன்றைக் கடந்த டிசெம்பர் மாதம் 25ஆம், 26ஆம் திகதகளில் நடத்தியது.

இப்பயிற்சி முகாமில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 10 இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

இந்த நிறுவனம் சிறுவர் அபிவிருத்திக் கருத்தரங்கு, இளையோர் பயிற்சி, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான ஒருநாள் பயிற்சி போன்ற பயிற்சிகளையும் கடந்த மாதம் நடத்தியுள்ளது என்று நிறுவனத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-202)

# மரண ஊர்வலத்தில் கொளுத்திய பட்டாசுகளால் மக்கள் பதற்றம்!

### காரைக்கால் பகுதியில் கடந்தவாரம் சம்பவம்

கோண்டாவில்,ஜன.11

மரண ஊர்வலத்தின் போது கொளுத்தப்பட்ட பட்டாசுகளின் சத்தங்களால் பொதுமக்கள் பெரும் பதற்றமடைந்தனர்.

இச்சம்பவம் கோண்டாவில், இணுவில் காரைக்கால் பகுதியில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இணுவில் - காரைக்கால் இந்து மயானத்திற்கு மரணமடைந்தவரின் சடலத்தைத் தகனக்கிரியைக்காக ஊர்வலமாக எடுத்துச் சென்றபோது பட்டாசுகள் கொளுத்தப்பட்டன. பட்டாசுகளின் வெடிச்சத்தங்கள் அப்பகுதி பொதுமக்களைப் பீதிக்குள்ளாக்கியது. இதையடுத்து வீடுகளுக்குள் முடங்கிய பொதுமக்கள் சில மணி நேரத்தின் பின்னர் சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தபோது தான் அது மரண ஊர்வலத்தில் கொளுத்தப்பட்ட பட்டாசின் வெடியோசை என்பது தெரியவந்தது.

அண்மைக்காலமாக குடாநாட்டில் இடம்பெற்று வருகின்ற கைக்குண்டு, கிளைமோர், துப்பாக்கி வேட்டுச் சத்தங்களால் பொதுமக்கள் அச்ச நிலைக்கு உள்ளாகி வருகின்றனர்.

வீதிகளில் சைக்கிள் 'ரியூப்' வெடித்தாலே பலரும் பீதிக்குள்ளாகின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் மரண ஊர்வலங்களின் போது பட்டாசு கொளுத்துவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

(ஐ-49)

# பட்டப்பகலில் வீடு புகுந்தோர் குடும்பஸ்தரை தாக்கினர்

### சுழிபுரம் மேற்கில் சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜன.11

பட்டப்பகலில் இரும்புக் கம்பிகளுடன் வீட்டினுள் நுழைந்த மூவர் வீட்டுவிறாந்தையில் வேலை செய்துகொண்டிருந்தவரை அடித்துத் தாக்கினர்.

இதனால், அவருக்குத் தலையிலும், முதுகுப்பகுதியிலும் காயம் ஏற்பட்டது. சுழிபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லத்துரை கிருஷ்ணகுமார் (வயது 30) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்தவராவார்.

சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட தகராறு காரணமாகவே இவர் தாக்கப்பட்டார் என்று கூறப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(ஐ-15)

# லிகோரியார் இளைஞர் மன்ற ஏற்பாட்டில் குருதிக்கொடை

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய இளைஞர் மன்றத்தினர் ஏற்பாட்டில் கடந்த ஞாயிறன்று குழந்தை யேசு முன்பள்ளியில் குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலை குருதிக் காப்பக மருத்துவர்கள் மேற்பார்வையில் குருதிக் கொடை வழங்கப்பட்டது.

மன்றத்தைச் சேர்ந்த 40இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் குருதிக் கொடை வழங்கினர்.

தேவாலயப் பங்குத் தந்தை அருட்திரு டி.இரவிச்சந்திரன் அடிகள் இதற்கான முன்னேற்பாட்டை மேற்கொண்டிருந்தார்.

சாவகச்சேரி புனித லிகோரியார் தேவாலய இளைஞர் மன்றத்தினர் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை குருதிக் கொடை வழங்கி வருவதும் கடந்த வருடம் இடம்பெற்ற குருதிக் கொடையாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் இந்த மன்றத்திற்கு சிறந்த குருதிக் கொடையாளர் நிறுவன விருது கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கது.

(ஒ-117)

## யாழ். கூ. சங்கத்துக்கு பொது முகாமையாளர் நியமனம்

அரியாலை,ஜன.11

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் கே.கவிந்திரதாஸ் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளராக எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் பணியாற்றவுள்ளார்.

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நீண்ட காலம் பணியாற்றும் தற்போதைய பொது முகாமையாளர் எம்.தெய்வேந்திரன் நாளை வியாழக்கிழமையுடன் ஓய்வு பெற்றுச் செல்கிறார்- என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)




# வர்த்தக நிலையங்களை வெள்ளியன்று திறப்பதற்கு வணிகர் கழகம் அனுமதி

யாழ்ப்பாணம்,ஜன.11

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 13ஆம் திகதி 'போயா' தினமாக இருந்தபோதிலும் சகல வர்த்தக நிலையங்களையும் திறந்து வியாபாரம் செய்வதற்கு வர்த்தகர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று யாழ். வணிகர் கழகத்தினர் அறிவித்திருக்கின்றனர்.

இதேவேளை - விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன்கள் பேணப்படவேண்டும் என்றும் -

13ஆம் திகதிக்குப் பின்னர் ஞாயிறு, 'போயா' நாள்கள் மற்றும் வர்த்தக விடுமுறை நாள்களில் வழமைபோல கடைகளைப் பூட்டி வர்த்தகர்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் - வணிகர் கழகத்தினர் கேட்டுள்ளனர்.

(த-203)

# லயன்ஸ் கழகம் நடத்தும் ஆங்கிலப் பயிற்சி

தென்மராட்சி,ஜன.11

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் படித்த இளைஞர், யுவதிகளுக்கான இரண்டாம் கட்ட ஆங்கிலப் பயிற்சி வகுப்பினை ஆரம்பித்துள்ளனர்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள விரும்பும் ஜி.சீ.ஈ சாதாரண தரம், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் சாவகச்சேரி, டச்சு வீதியில் உள்ள கழகச் செயலாளர் லயன் எம்.பீ.சண்முகநாதனிடம் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

## போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,ஜன.11

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நண்பகல் வரை நடைபெறும்.

அன்று வேதபாராயணம், காயத்திரி மந்திரஜெபம், இலட்ச அருட்சனை, திருநீற்றுப் பதிகம், பஜனை, சொற்பொழிவு ஆகியவற்றுடன் நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறும்.

(ஐ)

# தென்மராட்சி வலயத்துக்கு கணனிகள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஜன.11

சிறுவர் பாதுகாப்பு நிதியம் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்திற்கும் மேலும் மூன்று பாடசாலைகளுக்கும் கணனி இயந்திரங்களும் இலத்திரனியல் பொருள்களும் வழங்கியுள்ளது.

கல்வி வலய அலுவலகத்திற்கு கணனி, புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைக்காட்சிப் பெட்டி, திரையிடல் சாதனங்கள் ஆகியவற்றையும் -

வரணி மகா வித்தியாலயம், நாவற்குழி மகா வித்தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயம் ஆகியவற்றுக்கு கணனி இயந்திரங்களையும் வழங்கியுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(ஒ-117)






யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நத்தார் விழாவில் அருட் தந்தை எஸ்.ஜே. இராசநாயகம் அடிகளார் சொற்பொழிவாற்றுவதையும், யுவதி ஒருவர் கிறிஸ்மஸ் கீதங்கள் பாடுவதையும் நத்தார் பாப்பா பரிசுகள் வழங்குவதையும் படங்களில் காண்கிறீர்கள். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எங்கள் அன்புத் தெய்வத்தின்
## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
## அமரர் துரையப்பா தர்மராசா

பிறப்பு 21.01.1947 இறப்பு 17.12.2002

திதி:- திரியோதசி 11.01.2006

ஓராயிரம் ஆண்டுகள்
ஒரு கணப்பொழுதினில் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, சகோதரர்கள், சகோதரி,
மைத்துனர்மார், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள்
மற்றும் உற்றார், உறவினர். (45192)(52)

திருமதி செ. தர்மராசா,
'சற்குணபதி' பூநாறி மரத்தடி, K.K.S. றோட், கொக்குவில்.

## 20ஆம் ஆண்டு நினைவலைகள்
## செல்வி தங்கபூபதி முத்துவேல்



அன்னைமடியில் 08.10.1960 ஆண்டவன்அடியில் 25.12.1985

திதி:-11.01.2006

காலையும் வெந்தது
மாலையும் வெந்தது
ஆறாப்புண்ணில் மாறாக் காயமாய்
எரிந்தது தீயாய் நின்நினைவு
கன்னியம் காக்கும் பூபதியே
பத்திரண்டு காலம் ஓடிப்போனாலும்
உம் நினைவு நெஞ்சைவிட்டகலாது
நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்துவிட்ட உன் அன்பால்
நினைவிழக்க முடியாத – நாம்
நீந்துகின்றோம் கண்ணீரில்

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, மைத்துனி, மருமக்கள்,
சித்தப்பா குடும்பம்,மாமி, மைத்துனர்கள்.

'பதி பவனம்' சந்நிதி வீதி, உடுப்பிட்டி. (45179)(52)

# உயர்தர வகுப்புகளை...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

சைகளுக்குத் தோற்றியுள்ளனர். இவ்விரு பாடசாலைகளைச் சேர்ந்த 4 பேரும் அடுத்த பாடசாலைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதே பெருத்தமான செயலாகும். தீவக வலயத்தை எடுத்துக் கொண்டதால் மூன்று **IAB** தரப் பாடசாலைகளிலிருந்து 6 பேர் மட்டுமே கணித, விஞ்ஞானப் பிரிவுகளுக்குத் தோற்றியுள்ளனர். இவர்களும் தங்கள் பாடசாலைக்கு அண்மித்தாக அடுத்த வலயத்திலுள்ள பொருத்தமான பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கவேண்டும். இவ்வாறு செய்யப்பட்டிருப்பின் பெருமளவு ஆசிரிய வளம் வீணடிக்கப்பட்டிருப்பதைத் தவிர்த்திருக்கலாம் இந்தவகையிலான பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு மாவட்ட இணைப்பாளருடன் கூடிய பாடசாலை மட்ட, வலயமட்டக் குழுக்கள் அமைக்கப்பட் டுப் பிரச்சினைகள் முழுமையாக ஆராயப்படல் வேண்டும். பொருத்தமான பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான முடிவை இக்குழுக்களே தீர்மானித்து நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இவ்வாறான நடைமுறை மூலம் வலய மட்டத்திலும் மாவட்டமட்டத்திலும் நிறைவான உயர்தர வகுப்புப் பாடசாலைகளைப் பேணி வர முடியும். கலைப்பிரிவில் கற்கும் மாணவர்கள் தாம் விரும்பிய பாடங்களைத் தெரிவு செய்து பொருத்தமான ஆசிரியர்களிடம் கல்வி கற்கக்கூடிய கட்டமைப்பை உருவாக்கலாம். அனைத்துப் பாடங்களுக்கும் பொருத்தமான ஆசிரியர்களை நியமிக்கவும் முடியும். மாணவர்களின் சிறப்பான எதிர்காலத் தைக் கருத்திற்கொண்டு அதிபர்கள் தங்களின் மனப்பாங்குகளை மாற்றிக் கொண்டால் மட்டுமே இவ்வாறான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது சாத்தியமானதாகும்.

புலமைப்பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டு இயங்கும் பிரபல ஆரம்பப் பாடசாலைகள் பெற்றுக்கொடுக்கும் பெறுபேறுகளை ஆரம்பப் பிரிவுகளைக் கொண்டு இயங்கும் **IAB, IC** தரப் பாடசாலைகள் பெற்றுக்கொடுப்பதில்லை என்பது அனுபவ வாயிலாக நாம் அறிந்த உண்மை. இவ்வாறே உயர்தரப் பரீட்சையை இலக்காகக் கொண்டு பாடசாலைகள் (பல்கலைக்கழக முன் கல்லூரிகள்) நடத்தப்படும் சந்தர்ப்பத்தில் பெறுபேறுகளை நிச்சயமாக உயர்த்திக்கொள்ள முடியும்.

எனவே, **IAB, IC** எனும் பாடசாலையின் தரத்தைப் பேணும் நோக்கில் செயற்படாது குறைவான தொகை மாணவர்கள் காணப்படும் பாடசாலைகளின் உயர்தர வகுப்புகளை நிறுத்திவிட்டு வலய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகளை மட்டும் கொண்ட பாடசாலைகளை (பல்கலைக் கழக முன் கல்லூரிகள்) உருவாக்குவதற்குக் கல்விமான்களும் கல்வி நிர்வாகிகளும் நாட்டின் நிர்வாகிகளும் ஒன்றிணைந்து செயற்படவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். உடனடியாக அவ்வாறு செயற்பட்டால் எழுதப்படாத சட்டத்தின் மூலம் மாணவர்களின் கல்வியை வளப்படுத்திக்கொள்ள நாங்களாகவே வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

எனினும் சட்ட ரீதியாக இச்செயற்பாட்டை முன்னெடுப்பதற்குக் கல்விமான்களும் அரசியல்வாதிகளும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

அவ்வாறு செயற்படுவதன் மூலம் உயர்தர வகுப்புகளுக்கான பாடசாலைகளை (பல்கலைக்கழக முன் கல்லூரிகள்) வலய மட்டத்திலும் மாவட்டமட்டத்திலும் அமைத்து உயர் கல்வியில் மாணவர்களின் தரத்தை மேம்பாடடையச் செய்யமுடியும்.

(முற்றும்)

# சேவை நலன் பாராட்டு

## திருமதி தவமணி சச்சிதானந்த யோகீஸ்வரன்



Sp.trained(Commerce)B.Com,Dip.In Ed.SLTS-I

**சேவை விவரம்**

| | |
|---|---|
| மூதூர் மகாவித்தியாலயம் | 07.07.1975 - 28.02.1977 |
| பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி | 01.03.1977 - 31.12.1978 |
| மன்னார் அல்ரார் மகாவித்தியாலயம் | 01.01.1979 - 14.02.1982 |
| யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி | 15.02.1982 - 10.01.2006 |

**சுமார் 24 வருடகாலம் எமது கல்லூரியில் கடமைபுரிந்து ஓய்வு பெறும் எமது சக ஆசிரியை தமது ஓய்வுக்காலத்தில் தமது குடும்பத்தினரோடு மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்து டனும் வாழ எமது கல்லூரி நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் திருவருள் புரிவாராக**

யா/யாழ். இந்து மகளிர்கல்லூரி. அதிபர், ஆசிரியர், கல்விசாரா உத்தியோகத்தர்

## 6 ஆம் ஆண்டு நீங்காத நினைவுச் சுடர்

மண்ணில் 27 . 08 . 1949



விண்ணில் 23 . 12 . 2000

### திருமதி சந்திரன் அன்னலீலா [லீலா]

**திதி: 11.01.2006**

*பாசத்தின் திருவுருவே! பண்பின் உறைவிடமே!*
*எம் குடும்பத்தின் அணையாத ஒளி விளக்கே!*
*எம்மை வளர்த்து ஆளாக்கி எங்கள் ஒவ்வொருவரதும்*
*இதயங்களில் குடியிருக்கும் அன்புத் தெய்வமே!*
*வாழ்க்கை என்ற நீண்ட பயணத்தில் ஆறாண்டுகள்*
*ஆனாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு*
*மறையவே மறையாது!*

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்:
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
தகவல்: சந்திரன் [கணவர்]
நவாலி அரசடி, மானிப்பாய். (45177)


## இன்னும் நீங்கள் தாமதிக்கிறீர்களா ???



A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர் கல்வி பிரவேசம் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறுவதிலும் (Admission) உயர்கல்விக்கான வாய்ப்புக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான வாய்ப்புகளையும் உறுதிசெய்கின்றது. அதுமட்டுமல்லாது HND தகைமையைப் பெற்றுக் கொண்டவர்கள் போட்டி மிகுந்த வேலைவாய்ப்புச் சந்தையில் இலகுவில் தகுதியான வேலைகளைத் தட்டிச் செல்கின்றனர்.

### புதிய பிரிவுகள் ஆரம்பம் : 25.01.2006



இ. பிரதீபன்
மானிப்பாய்.

2003ஆம் ஆண்டு கணிதப்பிரிவில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய நான் கொழும்பு இந்துக்கல்லூரியின் பழைய மாணவன் ஆவேன். பல்கலைக்கழக அனுமதிக்கு எனது A/L பெறுபேறுகள் சற்றுப்போதாமல் இருந்தது. இந்நிலையில் கணனித்துறையில் எனக்கிருந்த ஆர்வம் கணனித்துறையில ஓர் பட்டப்படிப்பினை மேற்கொள்ளவேண்டும் என்ற பேரவாவாக மாறியது. எனது ஆர்வத்திற்கு பெற்றோரும் பக்கபலமாக இருந்தனர். கொழும்பில் வசித்துவந்த நான் யாழ்ப்பாணத்தில் IIS நிறுவனம் சர்வதேச ரீதியில் பிரபல்யமான BTEC HND கற்கைநெறியினை நடாத்திவருவதாகக் கேள்வியுற்றேன். கொழும்புடன் ஒப்பிடும்பொழுது குறைந்த செலவில் இக்கற்கை நெறியை யாழ்ப்பாணத்தில் கற்கக்கூடிய சந்தர்ப்பம் இருப்பதை அறிந்த எனது பெற்றோர் HND ஐக் தொடர அனுமதியளித்தனர். HND 4வது பிரிவில் பயின்றுவரும் நான் இறுதியாண்டுப் பட்டப் படிப்பினை சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொள்வதற்குரிய ஏற்பாட்டினையும் IIS நிறுவனமே எனக்கு செய்துதரவுள்ளது. என்போன்று பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத்தவறிய மாணவர்களுக்கு HND மிகச்சிறந்த ஒன்றாகும்.

BTEC HND
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre

IIS CITY CAMPUS
# 181, Navalar Road, Jaffna.
TP No. : 021 222 8060 / 021 222 2201


## பணி நிலைக்கான வேண்டுகை

எமது பணிகளிற்காக பின்வரும் பணிநிலைக்கு பொருத்தமான வேண்டுகைகள் எதிர்பார்க்கப்படுகின்றன

பணி நிலை :- தொழில்நுட்ப அலுவலர்

தகைமை :- 01 குடிசார் பொறியியலில் ஏற்றுக்கொள்ளப்பட்ட (Cevil Eng.) சான்றிதழுடன் குறைந்தது இரு (2) ஆண்டுகள் பட்டறிவு

**அல்லது**

02 கட்டட நிர்மாண தொழில்நுட்பவியலில் (B.C.T.) ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழுடன் குறைந்தது இரு (2) ஆண்டுகள் பட்டறிவு

அகவையெல்லை:- 40 அகவைக்கு உட்பட்டவர்

வேண்டுகை செய்யவேண்டிய முகவரி :-

"கல்விசார் கட்டுமானப்பகுதி"
தமிழீழக்கல்விக்கழகம்
நடுவப்பணியகம், கிளிநொச்சி.

பணிக்கொடுப்பனவு :-நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்

வேண்டுகை முடிவுதிகதி :- 15.01.2006

குறிப்பு :- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தொழில்நுட்ப அலுவலர் பணிக்கான வேண்டுகை எனக் குறிப்பிடவும்.

**பொறுப்பாளர்,**
**தமிழீழக் கல்விக்கழகம், தமிழீழம்.** (C/47277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டி

# யாழ். பல்கலையின் ஆண்கள் பிரிவு இரண்டாம் இடத்தைப் பிடித்தது

யாழ்ப்பாணம், ஜன.11

அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் இடையில் நடந்த விளையாட்டுப் போட்டியில் யாழ். பல்கலைக்கழகம் ஆண்கள் பிரிவில் 2ஆம் இடத்தையும் பெண்கள் பிரிவில் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடந்த இந்தப் போட்டியில் 12 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த வீர, வீராங்கனைகள் பங்கேற்றனர்.

இந்தப் போட்டியில் இரு ஓட்டப் போட்டியில் முதலிடம் பெற்ற யாழ். பல்கலைக்கழக வீரர் ஏ.யூட் பிரசாந்தன் அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றார்.

யாழ். பல்கலைக்கழக வீர, வீராங்கனைகள் பெற்ற வெற்றிகள் வருமாறு:-

**ஆண்கள் பிரிவு**

ஏ.யூட் பிரசாந்தன் - 800மீ., முதலாம் இடம், 1500மீ., முதலாம் இடம், 4x400 மீ., - 3ஆம் இடம்.

எம்.லாவண்யன் - தடியூன்றிப் பாய்தல் முதலாம் இடம், என்.கிஷோக்குமார் - உயரம் பாய்தல் - 2ஆம் இடம்.

ரி.விஜயகுமார் - குண்டெறிதல் - 2ஆம் இடம்.

ஆர்.இளம்சிங்கம் - 800மீ. - 3ஆம் இடம், 1500மீ - 3ஆம் இடம் - 4x 400மீ. - 3ஆம் இடம்.

எஸ். சுமன் - 400மீ. - 3ஆம் இடம், 4 x400மீ. - 3ஆம் இடம்.

ஏ.துஸ்யந்தன் - 100மீ. - 3ஆம் இடம்.

பி.கிஷோக்குமார் - 4x400மீ. - 3ஆம் இடம்.

**பெண்கள் பிரிவு**

ரி.வாசுகி - 400மீ.- தடைதாண்டல் - 3ஆம் இடம், முப்பாய்ச்சல் - 3ஆம் இடம், 4x400 மீ. - 2ஆம் இடம், 4x100மீ. - 3ஆம் இடம்.

எம்.மொஷாந்தி - 200மீ. - 3ஆம் இடம், 4x400மீ. 2ஆம் இடம், 4x100மீ. - 3ஆம் இடம்.

எம்.நிஷாந்தி குரூஸ் - 400மீ. - 2ஆம் இடம், 4x400மீ. - 2ஆம் இடம்.

ஜி.மதுரா - 100மீ. தடைதாண்டல் - 3ஆம் இடம்.

சி.பி.வேணி மெற்றல்டா - தட்டெறிதல் - 3ஆம் இடம்.

எஸ்.சாந்தினி - 4x100மீ. - 3ஆம் இடம்.

எஸ்.ஸ்ரீ பிரபாலினி - 4x100மீ. - 3ஆம் இடம்.

ஆர். பிறேமலக்ஷ்மி - 4x400 மீ. - 2ஆம் இடம்.

(3-19)



அமெரிக்காவில் ஃபுளோரிடா மாநிலம் ஆர்லான்டோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவுற்ற வால்ட் டிஸ்னி உலக மாரத்தான் போட்டியில் ஒட்டுமொத்த சம்பியன் பட்டம் வென்ற மகிழ்ச்சியில் பிரேசில் வீரர் அட்ரியனோ பாஸ்டோஸ்.

# 20-20 கிரிக்கெட்: ஆஸி.வெற்றி




தென் ஆபிரிக்காவுக்கு எதிரான 20 ஓவர்கள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென் ஆபிரிக்க அணி டெஸ்ட் தொடரை 2-0 என இழந்தது. எதிர்வரும் 13ஆம் திகதிமுதல் ஆஸ்திரேலியா தென் ஆபிரிக்கா மற்றும் இலங்கை அணிகள் பங்குபெறும் முத்தரப்பு தொடர் தொடங்குகிறது. அதற்கு முன்னர் ஆஸ்திரேலிய தென்ஆபிரிக்க அணிகள் நேற்றுமுன்தினம் 20 ஓவர்கள் கொண்ட போட்டியில் மோதின. முதலில் துடுப்பெடுத் தாடிய ஆஸ்திரேலிய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஹோப்ஸ் மற்றும் மார் டின் களமிறங்கினர். முதல் விக்கெட்டுக்கு 57 ஓட்டங்கள் சேர்ந்த நிலையில் ஹோப்ஸ் வெளியேறினார். பொண்டிங் ஓரளவு தாக்குப்பிடித்து 27 ஓட்டங்கள் சேர்த்தார். மூன்றாவது விக்கெட்டுக்கு மார்டின் சைமண்ட்ஸ் ஜோடி அபாரமாக ஆடியது. சைமண்ட்ஸ 26 பந்துகளில் 54 ஓட்டங்கள் விளாசினார். மார்டின் 96 ஓட்டங்கள் குவித்தார்.

ஆஸ்திரேலியா 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 209 ஓட்டங்கள் எடுத்தது. 210 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய தென் ஆபிரிக்க அணி தொடக்கம் முதலே சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தது. அதிக பட்சமாக பவுச்சர் 29 ஓட்டங்கள் எடுத்தார்.

தென் ஆபிரிக்கா 18.3 ஓவர்களில் 114 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதன் மூலம் ஆஸ்திரேலியா 95 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# சானியாவுக்கு ஆரம்பமே சறுக்கல்

இந்திய டெனிஸ் வீராங்கனை சானியா மிர்சாவுக்கு இந்த ஆண்டு தோல்வியுடன் ஆரம்பமாகியுள்ளது. சிட்னி ஓபன் டெனிஸ் தொடரின் முதல் சுற்றிலே அவர் தோற்றார். கடந்த ஆண்டில் இந்திய டெனிஸ் வரலாற்றில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியவர் சானியா மிர்சா. நட்சத்திர வீராங்கனைகள் பங்கேற்கும் சிட்னி பகிரங்க டெனிஸ் தொடர் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நடக்கிறது. இதுவே சானியா இந்த ஆண்டில் பங்கேற்கும் முதல் தொடர். இதில் நேற்றுமுன்தினம் நடந்த முதல் சுற்றுப் போட்டியில் உலகின் 17ஆம் நிலை வீராங்கனையான சுலோவோகியாவின் டேனிலா ஹன்டுசோவாவை எதிர்த்து சானியா விளையாடினார்.

ஆரம்பத்தில் சானியாவின் ஆட்டத்தில் அனல் பறந்தது. முதல் செற்றை 6-4 என்ற கணக்கில் எளிதில் கைப்பற்றினார். இதன் பின் ஹன்டு சோவாவின் ஆதிக்கம் ஆரம்பமானது. அவரது வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாத சானியா 2-6 என்ற கணக்கில் இரண்டாவது செற்றை இழந்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கக் கூடிய மூன்றாவது செற்றில் கடும் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சானியாவை சமாளித்து ஆடிய ஹன்டுசோவா எளிதில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டார்.



# பயிற்சி ஆட்டம் சமநிலையில் முடிவு

பாகிஸ்தான் ஏ அணியுடன் இந்திய அணி பங்கேற்ற 3 நாள் பயிற்சிக் கிரிக்கெட் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இப்போட்டி லாகூரில் கடந்த சனிக்கிழமை முதல் நடைபெற்று வந்தது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கடைசி மற்றும் மூன்றாம் நாள் ஆட்டத்தில் மும்பையைச் சேர்ந்த வாஸிம் ஜாஃபர் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இவர் முதல் இன்னிங்ஸில் அரைச் சதம் விளாசியிருந்தார். இவருடன் இணைந்த, டில்லியைச் சேர்ந்த தொடக்க வீரர் கவுதம் காம்பீரும் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். ஆட்ட நேரம் முடியும்போது இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 72 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுக்களை இழந்து 414 ஓட்டங்களைக் குவித்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொண்டது.

முன்னதாக, ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 2ஆம் நாள் ஆட்டத்தின் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களைச் சேர்த்த பாகிஸ்தான் ஏ அணி கடைசி நாளில் ஆட்டத்தைத் தொடங்கி, 9 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 358 ஓட்டங்களைக் குவித்திருந்த போது ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது. இந்தியத் தரப்பில் பதான் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். அகர்கர், ஆர்.பி.சிங் தலா 2 விக்கெட்டுக்களையும் ஜாகீர் கான், ஹர்பஜன் சிங் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# 2006இல் உங்கள் இராசி எப்படி?

## மகரம்

*உத்தராடம்2, 3, 4, திருவோணம், அவிட்டம், 1,2*

புத்தாண்டில் ஏழாம் இட சனியின் பார்வையில் உங்கள் ராசி உள்ளது. இருந்தாலும் மற்ற கிரகங்களின் அனுகூலதன்மையினால் பல்வேறு நலன்களைப் பெறும் வாய்ப்பு உருவாகும். வீடு, மனை போன்றவற்றில் அமைதி தரும் நன்னிலை நிறைந்திருக்கும். தாய்வழி உறவினர்களின் அன்பான செயல்கள் சிலசமயங்களில் உங்களுக்கு இதமான மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும். வீடு அபிவிருத்திப் பணிகளில் மனவிருப்பத்திற்கேற்ப நன்னிலை உண்டாகும். தாயின் உடல் நலம் நன்றாக இருந்து அவரின் அன்பையும் ஆதரவையும் பெற்றுத்தரும். சிலருக்கு விரும்பிய வகையில் வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. புத்திரர்கள் விளையாட்டுத்தனம் நிறைந்த குணங்களுடன் செயற்பட்டாலும் பெற்றோரின் அறிவுரைகளைத் தகுந்த சமயத்தில் கேட்டு நல்வழியில் நடைபோடுவார்கள்.

குடும்பத்திலுள்ள பெண்களின் பெயரிலுள்ள சொத்துகளை எவரேனும் ஏமாற்றி வாங்கிவிட வாய்ப்பிருக்கிறது. அவர்களைக் கவனமாக இருக்க அறிவுரை வழங்குங்கள். குலதெய்வ அருளும், பூர்வபுண்ணிய பலன்களும் வழிபாட்டு முறைகளைப் பின்பற்றுவதால் கிடைக்கும். சிரமமான சூழ்நிலையிலும் கூட கடன்களை அடைத்துவிடுவீர்கள். உடல்நலம், பணி, தொந்தரவு அணுகாத ஆரோக்கிய நிலை இருக்கும். எதிரித்தனமாகச் செயற்படுபவர்கள் உங்களைப் பற்றிச் சிந்திக்க முடியாதநிலைக்குத் தள்ளப்படுவார்கள். வழக்கு, விவகாரம் போன்றவற்றில் சிரமம் இருந்தால் சுமுகத்தீர்வு ஏற்படும். கணவன், மனைவி ஒற்றுமையில் சிறு நெருடல்கள் இருந்தாலும் விட்டுவிலகாத பாசம் குடும்பத்தை ஒருங்கிணைக்கும்.

தொழில், வியாபாரம் சார்ந்த வகையில் தங்கள் தொடர்புகளை அதிகப்படுத்திக் கொள்வதால் கூடுதல் முன்னேற்றம் பெறலாம். சிலருக்கு இடமாற்றமும் அபிவிருத்தித் தன்மைகளும் எண்ணம்போல நிறைவேறும். மூத்த சகோதரர்கள் உங்களின் நற்செயல்களுக்கு மிகவும் உறுதுணையாக நடந்துகொள்வார்கள். ஆதாய பணவரவுகள் உங்கள் கடந்தகால சிரமங்களைக் குறைக்க வெகுவாக உதவும். வெளியூர் பயணத்தால் மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் ஏற்படும். வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு முயற்சி செய்பவர்கள் அனுகூலம் தரும் நற்பலனைப் பெறுவார்கள்.

**தொழிலதிபர்கள்:** எலக்ரோனிக்ஸ் பொருள்கள், வாசனைத் திரவியங்கள், அழகு சாதனப் பொருள்கள், ஷம்பு உற்பத்தியாளர்கள் கூடுதல் உற்பத்தியும் பணவரவும் பெறுவார்கள். காகித உற்பத்தி, சீனி உற்பத்தி செய்பவர்கள், ஐஸ்கிரீம், சொக்லேட் தயாரிப்பாளர்கள் திறமையுள்ள பணியாளர்களின் செயற்பாடுகளால் தொழில் முன்னேற்றமும் ஆதாய பணவரவுகளும் பெறுவார்கள். எந்தச் செயலையும் துவங்குவதற்கான முயற்சிகளைத் தள்ளிப்போடாமல் உடனடியாக நிறைவேற்றுவதால் தொழில் வாய்ப்புகள் சிறப்பாக அமையும்.

**வியாபாரிகள்:** தங்க, வெள்ளி நகைகள், பாத்திரங்கள், வீடியோ கேம் சாதனங்கள், புடைவை வகைகள், இசைக்கருவிகள், மருந்து, அழகுசாதனப் பொருள்கள், மசாலா பொடி வகைகள், பால் பொருள்கள், கேக், பிஸ்கட், சொக்லேட் வகைகள் உற்பத்தியாளரிடம் சலுகைகளைப் பெற்று கூடுதல் விற்பனையும் வளமான பொருளாதார வரவும் பெறுவார்கள். பாத்திரங்கள், தளபாடங்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், பூசைப் பொருள், சோப்பு வியாபாரிகள் நல்ல முன்னேற்றமும் நிலையான பொருளாதார வரவும் பெறுவார்கள். நீங்கள் துவங்கும் செயல்களை ஒருமுக சிந்தனையுடன் செயற்படுத்துவதால் தகுந்த முன்னேற்றத்தை நிச்சயம் பெறுவீர்கள்.

சமூக சேவையிலும் தகுந்த நாட்டம் உண்டாகும். வீடு, மனை, வாகனம் போன்றவற்றில் மனதிற்கு இனிமை தரும் நிகழ்வுகள் நீடிக்கும். லாபமான ஆண்டுதான்.

**பணியாளர்கள்:** அரசு மற்றும் தனியார் பணியாளர்கள் தங்கள் பணியை உரியமுறையில் செயற்படுத்த பல்வேறு யோசனைகளுடன் தயக்கம் காட்டுவார்கள். சக ஊழியர்களின் துணைகொண்டு செயற்படுவதால் தயக்கங்கள் விலகி தெளிவான நிலை பிறக்கும். எதிர்மனப்பான்மையுடன் செயற்பட்டவர்கள்கூட நல்ல அபிப்பிராயத்துடன் உங்களை அணுகும் நன்னிலை உண்டாகும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் ஏற்கனவே உள்ள வியாபார நடைமுறைகளை மாற்றாமல் உள்ளபடியே செயற்படுத்துவதால் நிர்வாகச் சிரமங்கள் எதுவும் வராமல் தவிர்க்கலாம். சுயதொழில் செய்பவர்கள் தங்கள் தொழிலில் எதிர்ப்பு இல்லாத நல் வாய்ப்பு கிடைக்கப்பெறுவார்கள். உற்சாகத்துடன் உழைத்தால் நல்லநிலைக்கு முன்னேறலாம். தொழில் வகைக்குத் தேவைப்படும் வாகன வசதிகள் கிடைக்கப்பெறும்.

**பெண்கள்:** அரசு மற்றும் தனியார் துறையில் பணிபுரிபவர்கள் பணியில் முழுமனதுடன் செயற்பட சுற்றுச்சூழல் அனுகூலமாக இருக்கும். உத்வேக மனநிலையுடன் பணி செய்வதால் நிர்வாகத்திடம் தகுந்த பாராட்டுப் பெறுவர். சக ஊழியர்கள் அனுகூல உதவி புரிவார்கள்.

சிலருக்கு மாற்றுப் பணிகளும் இடமாறுதல்களும் பணி உயர்வும் தகுதிக்கேற்ப கிடைக்கும் மார்க்கம் உண்டு. கூட்டுத் தொழில் புரியும் பெண்கள் தங்கள் வியாபாரத் தொழில்நுட்பங்களை வளர்த்துக் கொள்வதால் தகுந்த வளர்ச்சி பெறுவார்கள். சுயதொழில் புரியும் பெண்கள் தங்கள் தொழில் சார்ந்தவர்களின் நட்பைப் பெற்று புதிய ஓடர்களும் பணவரவும் கிடைக்கப் பெறுவார்கள். குடும்ப நிர்வாகம் கவனிக்கும் பெண்கள் தேவையான பொருளாதார வசதிகள் கிடைக்கப்பெற்று மனநிறைவு தரும் வாழ்க்கை முறையை உருவாக்குவார்கள். வேலைவாய்ப்புக்குக் காத்திருக்கும் பெண்களுக்கு விரும்பிய துறையில் பணிவாய்ப்புகள் முயற்சியினால் கிடைக்கும்.

**மாணவர்கள்:** விவசாயப்படிப்பு, அச்சுத் தொழில்நுட்பம், கணனி மென்பொருள், ஆடை வடிவமைப்பு, மண்வள ஆராய்ச்சி, பாலிமர் தொழில்நுட்பம், மகப்பேறு மருத்துவம், மூளை, நரம்பியல் மருத்துவம், அறிவியல்துறை, வணிகவியல், சந்தையியல், நிதி, நிர்வாகம் போன்ற படிப்பில் உள்ள மாணவர்கள் சிறந்த கவனத்துடன் கல்வி பயின்று தனக்கும் குடும்பத்திற்கும் ஆசிரியருக்கும் தகுந்த புகழ் பெறுவார்கள். கட்டட வடிவமைப்பு, சாலை பராமரிப்பு, நீர்நிலை அபிவிருத்திப் பணிகள், கேட்டரிங், வேத பாடசாலை மற்றும் சாஸ்திர படிப்பில் உள்ளவர்கள் மிகுந்த கவனத்துடன் பயிற்சி பெற்று சிறந்த மாணவர்களாக உருவெடுப்பார்கள். படிப்புக்குத் தேவையான அனைத்து வசதிகளும் தாராளமாகக் கிடைக்கும். சகமாணவர்களின் நல் ஒத்துழைப்புக் கிடைக்கப் பெறும். தந்தையின் எண்ணங்களுக்கு ஏற்ப செயற்படுவீர்கள்.

(ஏனைய இராசிகளுக்கான பலன்கள் தொடர்ந்து வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SCC இன் கணனிப் பயிற்சி நெறிகள் 2006
ஆரம்பம் 12,15.01.2006

Special Offer 2000/=

இருள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 | 4 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN NETWORK ENGINEERING | 5 Months |
| DIPLOMA IN WEB DESIGNING | 4 Months |
| DIPLOMA IN COMPUTER SCIENCE | 6 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | 2 Months |

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170,
0777846811

வெளிநாட்டு வேலை வாய்ப்பு

மலேசியா, டோகா, கட்டார், டுபாய் ஆகிய நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு

ஒரு மாதத்தில் பிரயாணம்

★ டோகா, கட்டார், டுபாய்

தச்சுவேலை, மேசன் வேலை, பார்பைண்டர்ஸ், எலக்ரீசியன், பிளம்பர், சாரதி, OFFICE BOY, விமான நிலையத் துப்புரவுத் தொழிலாளர், பொதி சுமப்போர் (PORIERS)

★ மலேசியாவில்

ஆண்/ பெண் இருபாலாருக்கும் பின்வரும் துறைகளில் வேலை வாய்ப்பு
சுப்பர் மார்க்கட், கொம்பியூட்டர் கம்பனி, தையல் வேலை, பொது வேலை, துப்பரவுத் தொழிலாளர், உதிரிப்பாக உற்பத்தியாளர்

தொடர்பு:

RAINBOW TROVELS and TOURS
32/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 0777328219,
021 222 3237.

(சி-47308) (39.21.11.19)

## மரண அறிவித்தல்

### செல்வன் சந்திரன் வினோதன்

கரவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் சந்திரன் வினோதன் அகால மரணமானார்.

இவர் சந்திரன் - லோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் வினோதிகாவின் அன்புச் சகோதரனும் நாவற்குழியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையினார் - நாகம்மா தம்பதியர் காலஞ்சென்ற வீரகத்தி - தெய்வானை ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
திரு.திருமதி சரவணபவன்
(மாமன், மாமி)
218, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.
தொ.இல. 222 3076

ஜேர்மன் தொடர்பு:
தொ.இல. 00495105514964
(45232)(21.11.19)

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள்

சிவஸ்ரீ சி.குஞ்சிதபாதக் குருக்கள் (பிரதம குரு கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் தேவஸ்தானம்) அவர்கள் 10.01.2006 செவ்வாய்க்கிழமை அதிகாலை வைகுண்ட ஏகாதசி திதியில் சிவபதமடைந்தார்.

அவரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2006) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் 136/28, ஜோர்ஜ் ஆர் டிசில்வா மாவத்தையிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் நண்பகல் 12 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
T.P.2330459
0777887179
0777686029
Email - Skandaki @ sltnet.lk
- Skkuru@sltnet.lk

(சி-47309)
(21.39.18.11)

வீடு வாடகைக்கு

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிச் சந்தியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: தியாகராஜா கிளினிக்,
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
T.P.: 021 222 5058

(45242)

### மரம் அரியும் இயந்திரத்தில் சிக்கி இருவர் காயம்

மரம் அரியும் இயந்திரத்தினுள் கைசிக்குண்ட இருவேறு சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இச்சம்பவங்களில் திருநெல்வேலியில் பத்மநாதன் பகீரதன் (வயது-17) என்பவரும் நகரப் பகுதியில் சின்னத்தம்பி பிரேம்நாத் (வயது-20) என்பவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

அவர்கள் இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

(ஒ-15)

### இளைஞனுக்கு வாள்வெட்டு

இரவு வேளையில் வீட்டினுள் நுழைந்த இனந் தெரியாத இருவர் அந்தவீட்டு இளைஞனைவாளால் வெட்டினர்.

கட்டுடையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராசதுரை குணசீலன் (வயது -17) என்ற இளைஞனே வாள் வெட்டுக்கிலக்காகி தலையில் படுகாய மடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-15)

## மரண அறிவித்தல்

### அந்தோனியா டெய்சி யோகராஜ்
(மலர் - அளவெட்டி அலுக்கை)



அளவெட்டி; அலுக்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட அந்தோனியா டெய்சி யோகராஜ் அவர்கள் சென்ற 09.01.2006 அன்று அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமிர்தநாதர் றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஜோன் சந்தியாப்பிள்ளை (ஆங்கில ஆசிரியர் அருணோதயாக் கல்லூரி), அந்தோனியாராணி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மனோன் மற்றும் ஜோசப் அன்ரன், காலஞ்சென்ற அல்பிரட் பெனான்டோ ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரான்சிஸ்சின் மைத்துனியும் ஜோன்போலின் பெரியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை 11.01.2006 பிற்பகல் 3.30 மணியளவில் புனித சூசையப்பர் (அளவெட்டி) ஆலயத்தில் நடைபெற்று, பின்னர் அளவெட்டி புனித சூசையப்பர் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி அலுக்கை,
அளவெட்டி.
(45243)(24)

தகவல்:
ச.மை.யோகராஜ்
(கணவர்).

## ஜயோதா

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6456437 முதல் 6466814 வரை. சீட்டிழுப்பு இல. 201 திகதி 09-01-2006

வெற்றி எண்கள்

7 8 8 3 1 6 சுப்பர் எண் 05

ஜக்பொட் பரிசு ரூ. 15,023,725/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 15,023,725/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 91 | 5,000/= | 455,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 906 | 500/= | 453,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 9076 | 50/= | 453,800/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 89924 | 10/= | 899,240/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 94 | 1,000/= | 94,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 902 | 100/= | 90,200/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8993 | 20/= | 179,860/= |
| | | மொத்தம் ரூ. | 4,120,100/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,722,700/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| நுவரேலியா | 6461504-6-64 |
| மொனராகல | 6460838-5-00 |
| மாத்தறை | 6463324-0-73 |
| பொலன்னறுவ | 6459025-2-06 |
| கண்டி | 6458545-1-75 |
| திருகோணமலை | 6461703-7-53 |
| கேகாலை | 6458391-5-50 |
| கொழும்பு | 6460515-6-62 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 15,276,025/-

தொடர் இல. 7379641 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஜனவரி 12 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

4 வது வருடத்தில் BBS இன் 4 வளாகங்கள்

யாழ்ப்பாணம் கோயில் வீதி | யாழ்ப்பாணம் கண்டி வீதி | பருத்தித்துறை கிராமக் கோட்டடி | மானிப்பாய் ஆலடிச்சந்தி

எதிர் தைப்பெங்கல் தினத்தன்று (14.01.2006) சுபநேரத்தில் அனுமதி பெற விரும்புவோருக்காக எமது அலுவலகம் திறந்து வைக்கப்பட்டிருக்கும்

Year 1-5 English Medium
Week End Classes நடாத்தப்படும்.
ஆங்கிலம், கணிதம், சுற்றாடல், பாடல்கள் ஆகிய பாடங்கள் நடைபெறுகின்றன. மேற்கூறப்பட்டயாவும் எமது யாழ் நகர் வளாகங்களில் நடாத்தப்படுவது போன்று மானிப்பாய் வளாகத்திலும் சிறந்த கொழும்பில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களினால் நடாத்தப்படும்.

ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலை
வயது 2+ முதல் வயது 3 வரை Play Group
வயது 3+ முதல் வயது 4 வரை Montessori
வயது 4+ முதல் வயது 5+ வரை Pre-School
விசேட அம்சங்கள்
✱ ஆங்கில மொழிமூலமான சிறந்த கற்பித்தல்.
✱ தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்.
✱ பிள்ளைகளின் தனிப்பட்ட திறமைகளை வெளிப்படுத்தும் வருடாந்த நிகழ்வுகள்.
✱ முன்பள்ளியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுவார்.

BBS ஆல் நடாத்தப்படும் மற்றைய ஆங்கில மொழி பாடநெறிகள்
Diploma in English
Certificate in English
IELTS
5+ to 14+ சிறார்களுக்கு
PRE-FOUNDATION
FOUNDATION
LOWER INTERMEDIATE
INTERMEDIATE
UPPER INTERMEDIATE

BRITISH BUSINESS SCHOOL
இல:140, கோயில் வீதி, யாழ்ப்பாணம். | பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, | இல:174,கண்டி வீதி, யாழ்ப்பாணம். | இல:252, யாழ்ப்பாண வீதி, ஆலடிச்சந்தி,
HOT LINE : 021-222-5796 e-mail: british.businessschool@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திலீபன் மருத்துவப்பிரிவின் சேவைக்கு சுகாதாரசேவைப் பணிப்பாளர் பாராட்டு

ஒட்டுசுட்டான்,ஜன.11

தியாக தீபம் திலீபன் மருத்துவப் பிரிவினர் முல்லை. மாவட்ட மக்களின் நன்மை கருதி வழங்கிவரும் மருத்துவசேவைக்கு முல்லை.மாவட்ட சுகாதாரசேவைப் பணிப்பாளர் து.வி.ஜெயகுலராசா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுகாதார வசதிகளற்ற முல்லை. மாவட்டத்தில் வைத்தியசாலைகளை நிறுவிய போதும் போதியளவு வைத்தியர்கள் இன்மையால் மக்களுக்கான சிறந்த சேவையை வழங்கமுடியாதுள்ளது.

முல்லை. மாவட்ட வைத்தியசாலையில் தேவைக்கேற்ப வைத்தியர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. தாதியர்கள், சுத்திகரிப்பாளர்களும் போதியளவில் நியமிக்கப்படவில்லை. இத்தகைய சூழ்நிலையிலேயே மக்களுக்கு வேண்டிய சேவையை வழங்கி வருகின்றோம்.

இம்மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சத்து 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கு மருத்துவ சேவை வழங்க 15 வைத்தியர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் மக்களுக்குப் பூரணமான சேவையை வழங்கமுடியாது.

மக்களின் நன்மை கருதி முல்லை. மாவட்ட வைத்தியசாலையில் நிலவும் குறைகளை நிவர்த்திசெய்யுமாறு சுகாதாரத் திணைக்களத்திடமும் சுகாதார அமைச்சிடமும் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் இதுவரை எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவைப் பிரிவினர் இப்பகுதிகளின் நன்மைகருதி சிறந்த முறையில், பாராட்டத்தக்கவகையில் மருத்துவ சேவையினை வழங்கிவருகின்றனர் - என்றார்.(த-6-341)

## தட்சணாமருதமடு கிராமத்தில் 18 வீடுகள் மழையினால் சேதம்

பரந்தன்,ஜன.11

மன்னார் மாவட்டத்திலுள்ள தட்சணா மருதமடு கிராமத்தில் சமீபத்தில் பெய்த கடும் மழையால் 18 வீடுகள் அழிவடைந்துள்ளன.

பருவமழை காரணமாக இப்பகுதியிலுள்ள சுமார் 18இற்கு மேற்பட்ட வீடுகள் முழுமையாகச் சேதத்திற்குள்ளாகியுள்ளன. அத்துடன், தாழ் பிரதேசத்தில் காணப்படும் பல வீடுகளில் மழை வெள்ளம் புகுந்துள்ளதுடன், வீடுகளின் சுவர்களும் இடிந்து வீழ்ந்துள்ளன. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சர்வதேச தொண்டு நிறுவனங்களோ அன்றி அரச திணைக்களங்களோ உதவி வழங்க முன்வரவில்லை எனவும் மக்கள் தரப்பிலிருந்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

(த-6-352)

## ஆண்டான்குளம் - முழங்காவில் வீதி பலத்த சேதம்; பொதுமக்கள் சிரமம்

ஒட்டுசுட்டான்,ஜன.11

மன்னார் ஆண்டான்குளத்திலிருந்து முழங்காவில் வரையிலான வீதி மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

இந்த வீதி ஒவ்வோர் ஆண்டும் கிரவல் மணல் மூலம் புனரமைக்கப்பட்டு வருகிறது என்றும் - பின்னர் இக்கிரவல் மணல் போடப்பட்டு சுமார் 6 மாத காலப் பகுதிக்குள் வீதி மீண்டும் சேதமடைந்து விடுகின்றது என்றும் - கூறப்பட்டது.

எனினும், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக கிரவல் மணல்கூட வீதிகளுக்கு இடப்படவில்லை என்றும் - இதனால் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது என்றும் - கூறப்பட்டது. (எ-6-341)

## துணுக்காய் வலயத்தில் ஓய்வுபெற்ற அதிபர்களுக்கு!

துணுக்காய்,ஜன.11

அதிபர் சேவையில் கடமைபுரிந்து ஓய்வு பெற்றவர்களுக்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி மாற்றியமைக்கப்பட்ட ஓய்வூதியம் தொடர்பான கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜே.குரூஸ் தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியம்பெற்ற அதிபர்கள் கடைசியாகக் கடமையாற்றிய பாடசாலைகளுக்கு இந்தக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் - அக்கடிதங்களை உரியவர்கள் பெற்றவுடன் அவர்கள் துணுக்காய் கல்வி வலயத்துடன் தொடர்புகொள்ளவேண்டும் என்றும் - துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த-203)


## தொழிற்பயிற்சி நிலையம் - பூநகரியில் திறப்பு

பரந்தன்,ஜன.11

'நீடோ' நிறுவனத்தினால் பூநகரிப் பிரதேசத்திலுள்ள ஜெயபுரம் பகுதியில் தொழில்சார் பயிற்சி நிலையம் ஒன்று கடந்த 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'நீடோ' நிறுவனத்தின் 'லூஸ்க்' திட்ட உதவி இணைப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தேசியக் கொடியினை 'நீடோ' நிறுவனப் பணிப்பாளர் ராணி மைந்தன் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரினை ஜெயபுரம் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து மின் ஒட்டு மற்றும் உந்துருளி திருத்துதல ஆகிய பயிற்சிகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.(த-6-352)






*கிளிநொச்சி மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சுண்டிக்குளப் பகுதி மக்களுக்கென கல்லாறு கிராமத்தில் அமைக்கப்பட்டுவரும் நிரந்தர வீடுகளைப் படங்களில் காணலாம். இப்பகுதியிலுள்ள 143 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்படுகின்றன.* *(படங்கள்: பரந்தன் செய்தியாளர்)*




## காலநடை வளர்ப்போர் சங்கம் பூநகரியில் மீண்டும் இயங்குகிறது

பூநகரி,ஜன.11

பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் கடந்த மாதம் முதல் மீண்டும் பூநகரி, வாடியடி கால்நடை வைத்தியசாலைக்குச் சமீபமாக இயங்கிவருகிறது.

இச்சங்கம் 1990ஆம் ஆண்டு பூநகரியில் இயங்க ஆரம்பித்தது. பூநகரியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட வலம்புரி ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாக இயங்காமல் செயலிழந்தது.

பின்னர், பூநகரி மக்கள் 2003ஆம் ஆண்டு மீளக்குடியமர்ந்தனர். இந்த நிலையில் கடந்த டிசெம்பர் மாதம் முதல் பூநகரி, வாடியடி கால்நடை வைத்தியசாலைக்கு அண்மையில் இயங்கிவருகின்றது.

இதில் கால்நடைகளுக்கான தீவனங்கள், மருந்துவகைகள் என்பன விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்று பூநகரி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் த.இரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இச்சங்கத்திற்கான ஆலோசகர்களாகப் பூநகரி கால்நடை வைத்தியசாலை வைத்தியர் கௌரி திலகன், பூநகரி கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சூரியகுமாரன் ஆகியோர் செயற்படுகின்றனர்.

(த-403)

## புதுக்குடியிருப்பு - முள்ளியவளை வீதியில் பாலங்கள் சேதம்; பயணிகள் சிரமம்!

புதுக்குடியிருப்பு,ஜன.11

புதுக்குடியிருப்பு - முள்ளியவளை வீதியிலுள்ள பாலங்கள் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால், இந்த வீதியால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த ஆண்டு இறுதிப்பகுதியில் ஏற்பட்ட கடும் மழை காரணமாக இவ்வீதியும் குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இரு பாலங்களும் சேதமடைந்துள்ளன. இதனால், துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடமுடியாதநிலை ஏற்பட்டிருக்கிறது.

கேப்பாபுலவு, வற்றாப்பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெருமளவான மக்கள் தமது தேவைகளை நிறைவுசெய்வதற்குப் புதுக்குடியிருப்புக்கு வந்து செல்லவேண்டிய தேவை உள்ளது. ஆனால், இந்த வீதி சீரின்மையாகக் காணப்படுவதால் மக்கள் சுமார் 30 கிலோமீற்றர் தூரம் வரை சுற்றியே தமது பயணத்தைத் தொடரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இப்பகுதி மக்களின் நன்மை கருதி புதுக்குடியிருப்பு - முள்ளியவளை வீதியையும் அதிலுள்ள பாலங்களையும் புனரமைப்புச் செய்வதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-6-353)

## கால்நடை வளர்ப்புத் தொடர்பாக சித்தங்குறிச்சியில் கருத்தூட்டல்

கிளிநொச்சி,ஜன.11

கிளிநொச்சி மாவட்ட பூநகரி, சித்தங்குறிச்சிக் கிராமத்தில் கால்நடை வளர்ப்போர்களுக்கான கருத்தரங்கு ஒன்று கடந்த 5ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு 'நியாப்' திட்ட சமூக வலுவூட்டாளர் செரோன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்புரையைச் சித்தங்குறிச்சிக் கிராமசேவையாளர் தி.சிவலிங்கம் நிகழ்த்தினார்.

கருத்துரையைப் பூநகரி கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் க.சூரியகுமாரன் வழங்கினார். கால்நடை வளர்ப்புத் தொடர்பான வீடியோப் படக்காட்சியும் கண்பிக்கப்பட்டு விளக்கங்களும் வழங்கப்பட்டன.

அத்துடன், கால்நடை செயற்கைமுறைச் சினைப்படுத்தல் சம்பந்தமான விளக்கவுரையும் வழங்கப்பட்டது. இதில் 75இற்கு மேற்பட்ட பயனாளிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (த-403)

## இலுப்பைக் கடவையில் சுகாதாரக் கேடு; தொற்றுநோய்கள் பரவும் ஏதுநிலை!

ஒட்டுசுட்டான்,ஜன.11

இலுப்பைக் கடவைப் பகுதியில் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் செயற்பாடுகள் இடம்பெறுவதால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியிலுள்ள சந்தை வியாபாரிகளின் கழிவுப்பொருள்கள் மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் கொட்டப்படுகின்றன. இதனால், அவ்விடங்களில் மழைநீர் தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகின்றது. அங்கு ஏற்பட்டுள்ள சூழல் மாசடைவால் இப்பகுதிகளில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதால் மலேரியா போன்ற தொற்றுநோய்களின் தாக்கம் ஏற்படக்கூடிய அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-6-341)



*புளியங்குளம் முல்லைத்தீவு வீதியில் சன்னாசி பரந்தன் என்ற இடத்தில் உள்ள பாலம் நீண்ட காலத்துக்குப் பிறகு வீதி அபிவிருத்தி அதிகார சபையால் புனரமைக்கப்பட்டது. அந்தப் பாலத்தையே படத்தில் காணலாம்.*

*(படம்: புளியங்குளம் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

**திருமதி நித்தியாஞ்சலி கிருஸ்ணானந்தன்**
(சித்திரமும் வடிவமைப்பும் இறுதி ஆண்டு மாண்வி - யாழ். பல்கலைக்கழகம்)

எமது கல்லூரிஆசிரியர் திரு.கிருஸ்ணானந்தன் அவர்களின் அன்புப் பாரியார் 09.12.2005 அன்று அகால மரணமடைந்த மையால் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியவட்டம்,
**யா/மத்திய கல்லூரி.**

(45199)(42-16)

# புதிய பாடங்களுக்கு தென்மராட்சியில் செயலமர்வுகள்

தென்மராட்சி,ஜன.11

பாடசாலைகளில் தரம் எட்டு வகுப்புகளில் இவ்வருடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள வரலாறு, புவியியல், குடியுரிமைக் கல்வி ஆகிய பாடங்களைத் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்குச் செயலமர்வுகள் எதிர்வரும் 15, 21 ஆகிய திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 15 ஆம் திகதி புவியியல், குடியுரிமைக் கல்வி ஆகிய பாடங்களுக்கும் 21ஆம் திகதி வரலாறு பாடத்திற்கும் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

இப்பாடங்கள் கற்பிக்கப் பாடசாலைகளில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் செயலமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-117)

## கல்வி அலுவலகத்தில் பொங்கல் விழா

தென்மராட்சி,ஜன.11

தென்மராட்சி கல்வி வலயத்தினர் பொங்கல் விழாவினை நடத்தவுள்ளனர். பொங்கல் தினத்தன்று வலய அலுவலகத்தில் விழா இடம்பெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-117)

## சிறுவர்களுக்கான கல்வி

கொக்குவில் இந்துக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம் நடத்தும் சிறுவர்களுக்கான (3'4') ஆங்கிலமொழி மூலமான பாலர் வகுப்புகள் 16.01.2006 இல் ஆரம்பமாகவுள்ளன. அத்துடன், கணனிப் பாடநெறிகளும் நடைபெறவுள்ளன. ஆகவே, இப்பயிற்சி நெறியினைத் தொடர விரும்பும் மாணவர்கள் தமது பதிவுகளை இராஜபரமேஸ்வரி தொழில்நுட்பக் கணனிப் பகுதியில் மேற்கொள்ளவும்.

**- செயலாளர்.**

(45195)(42-16)


# COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல.15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.
021-222 8250,0777 222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

# Diploma in Video Editing

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

*Course Contents*

- கணனி தொடர்பான அறிமுகம்
- இயக்க அமைப்பு (Windows XP)
- Internet & e-mail
- Adobe Photoshop
- Adobe Premiere
- Cool 3D Studio
- Pinnacle Studio
- VCD Cutter
- Extra practical

Free Study Pack & Photos CD

Course fee :- 3000/=

நன்மைகள்:-

- பாடநெறியின் இறுதியில் Video Editing தொடர்பான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
*16/01/2006 :- 08.30*


## பணியாளர் தேவை

திருநெல்வேலி, கொக்குவில் சந்தைகளை 2006ஆம் ஆண்டு நாம் குத்தகைக்குப் பெற்றுள்ளோம்.

இச்சந்தைகளில் பணிபுரிவதற்குப் பணியாளரைச் சேர்க்கவுள்ளோம். பணிபுரிய விருப்பமுடையோர் சுய விவரம் அடங்கிய விண்ணப்பத்தை 2006.01.20 ஆம் நாளிற்குள் திருநெல்வேலிச் சந்தையில் அல்லது கீழ்க் குறிப்பிடப்படும் முகவரியில் ஒப்படைக்குமாறு வேண்டுகின்றோம்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
**செயலாளர்,**
**ஆலய பரிபாலன சபை,**
**பெரியதம்பிரான் ஆலயம்,**
**யாவில் வீதி,**
**சாவல்கட்டு,**
**ஆனைக்கோட்டை.**

(45223)(42-16)


# Direct Star

O/L பரீட்சைகளின் பின்...




1. Diploma in Microsoft Office — DMO — 4 months
2. Diploma in Computer Programming — DCP — 4 months
3. Diploma in Desktop Publishing — DTP — 3 months
4. Diploma in Web Design — DWD — 4 months
5. Diploma in Computerised Accounting — DCA — 3 months

மாணவரின் முதன்மை தெரிவு ஏசியன் !

- 13 ஆண்டுகள் கணினிக் கல்விச் சேவை
- அனுபவமிக்க பயிற்சியாளர்கள்
- ஒவ்வொரு மாணவரிலும் தனிப்பட்ட கவனம்
- இலவச பாடப் புத்தகங்கள்
- Transfer Facility
- தவணை முறைக் கட்டணங்கள்

Free Study Packs

ICM ENGLAND Recognised Certification

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

# ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | சுன்னாகம் | நெல்லியடி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 2 G, ஸ்ரான்லி வீதி, Tel : 021-222 5677 | 108,K.K.S.வீதி, (Jet Motors) சுன்னாகம். Tel : 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel : 077-3122198 | கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3039587 |




பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 127 ஆவது ஜெயந்தி தினம்

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 127 ஆவது ஜெயந்தி தினம் எதிர்வரும் 13.01.2006 அன்று கந்தர்மடத்தில் அமைந்துள்ள ஆனந்த சாகரத்தில் முற்பகல் 10.30 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.*

*இவ்விழாவில் பகவானின் அடியார்களைக் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.*

**நிகழ்ச்சிகள்:**

1. திருவெண்ணாமலைத் தேவாரம்
2. பகவான் சரித்திர சுருக்கம் மற்றும் ரமணயோகம்
3. பகவான் மீது அடியார்களால் பாடப்பெற்ற தோத்திரங்கள்
4. அருணாசல அஷர மணமாலை பாராயணம்
5. ராம நாம பஜனை
6. ஆரத்தி

**சுவாமி இராமதாஸ் பவுண்டேசன்,**
**ஆனந்தசாகரம்,**
138, அரசடி வீதி, கந்தர்மடம்.

(45206)(42-16)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

| மண்ணகம் | விண்ணகம் |
|---|---|
| 1943 - 07 - 16 | 2003 - 01 - 11 |



**அமரர் சபாபதி நாராயணன்**
*(ஓய்வுபெற்ற கிராம சேவகரும் சமாதான நீதிவானும்)*

உருக்குலைந்த கோட்டைகள்
சரித்திரம் மறப்பதில்லை
கற்றோர் அவையில் முன்னின்று
மற்றோர் குற்றம் கூறாத வகையில்
வாழ்ந்த எங்கள் தந்தையே!
நீங்கள் இல்லாத வாழ்வு இன்று கானல்தான்.

*பிள்ளையார் கோயிலடி,*
*வடலியடைப்பு.* (45214)(42-16)

**மனைவி,**
**பிள்ளைகள்.**




# மலிவு விற்பனை

- கிறீன்பலஸ் எம்போறியம் ஓராண்டு நிறைவை ஓட்டி மாபெரும் மலிவு விற்பனை 10 % முதல் 30% வரை அனைத்து ஆடைகளுக்கும்!
- உங்கள் முதல் தெரிவுகளுக்கு இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை.
- யாழ் நகரில் குறைந்த விலையில் நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத் தரங்கள்! அழகிய புடவைத் தினிசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்

# கிறீன்பலஸ் எம்போறியம்

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கில மொழிக் கல்லூரியில் நேற்று சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி,ஜன.11

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிஸ் கிளையின் நிதிப்பங்களிப்புடனும் மாணவர் அமைப்பின் நிர்வாக அனுசரணையிலும் நிர்வகிக்கப்பட்டுவரும் கிளிநொச்சி ஜெயந்திநகரில் அமையப்பெற்றுள்ள ஆங்கில மொழிக் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம் பெற்ற இந்நிகழ்விற்கு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன் தலைமை தாங்கினார்.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடர் ஏற்றப் பட்டதையடுத்து நளன் அவர்களின் தலைமையுரை இடம்பெற்றது.

இதனை அடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி வாழ்த்துரை வழங்கினார்.

அவர் தனதுரையில் நீண்டகாலப் போர்ச் சூழ்நிலைகள் காரணமாக தமிழ் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டு பின்தங்கிக் காணப்பட்டது.இதையடுத்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல்வேறு வழிகளில் மாணவர்களின் கல்வி நிலையினை உயர்த்துவதற்கு தன்னாலான பங்களிப்பினை தொடர்ந்து செய்துவருகிறது.அந்த வகையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சியைப் பொறுத்த வரையில் தாய்மொழியில் கற்கை நெறிகளை மாணவர்களுக்கு போதிக்க வேண்டிய தேவை இருக்கின்ற போதிலும் இன்றைய உலக விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிப் போக்கில் ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தையும் அறிந்து இந்த ஆங்கில மொழிக் கல்லூரியை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நிறுவியது எனக் குறிப்பிட்டார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கான தேர்வுச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வைபவ ரீதியாக நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் விரிவுரையாளர்கள்,அரசியல்துறை துணைப் பொறுப்பாளர், மாணவர்களது பெற்றோர்கள், மாணவர் அமைப்பினர், கல்விமான்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்., (3-6)

# நீதியான தீர்வைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களுக்கு மேலாக நடத்திய அனைத்துப் போராட்டங்களும் விழலுக்கு இறைத்த நீராகிவிடலாமா? பம்மாத்து நாடாளுமன்றில் சாத்வீகப் போராட்டங்கள் சாதித்தவை என்ன? உயிரையும், உறவுகளையும், உடைமைகளையும் இழந்தது தான் மிச்சம். திட்டமிட்ட இன அழிப்பில் இலங்கை உச்சக்கட்டத்தில் நின்றதை நாம் கண்டோம்.

குட்டக் குட்டக் குனியும் மடையர் என எம்மை நினைத்தவர்களை தட்டிக் கேட்டவை எமது புதல்வர்களின் கரங்களில் ஏந்திய ஆயுதங்கள். பட்டறிந்து போவதை விட தட்டிக்கேட்டு, வெட்டிச் சரித்து, சரித்திரம் படைத்தபோது தான் தட்டிக்கழிக்க முடியாது சமரசம் பேச வந்தனர் எமது எதிரிகள். சர்வதேசமும் உற்றுப்பார்த்து உணர்ந்து கொண்டதால் விட்டுக்கொடுப்புடன் சமாதானத் தேவையுடன் சரியென வந்தனர்.

சமாதானத்தை உச்சரித்துக்கொண்டே இன சுத்திகரிப்பு நடவடிக்கைகளிலும்,மனித உரிமை மீறல்களிலும், யுத்த நிறுத்த மீறல்களிலும் தனது இராணுவத்தை ஈடுபடுத்திக் கொண்டும், சர்வதேசத்தை ஏமாற்றிக் கொண்டும் இருக்கிறது அரசு. சர்வதேசம் எங்கும் எம் வீரப் புதல்வர்களின் பலம் உணர்ந்து கொள்ளப்பட்ட நிலையில், வெறிபிடித்த இராணுவத்தினதும், அரசினதும் பேரினவெறி பெரிதாகத் தொடரவே செய்கின்றது.

அரிய தியாகத்தினால் எமது மண் அகிலம் வியக்கத்தக்க வகையில் கலங்கி நிற்கிறது; நமது படை சகல மக்களின் வாழ்வுக்காக, சமாதானத்துக்காக தலை சாய்த்து நிற்கின்றது. எமது ஈழப்போரின் கரங்களாகிய மக்கள் எதிர்பார்த்தது பொய்த்து விடக்கூடாது.எமக்காய் தியாகத் தீயில் உயிரிழந்த எம்புதல்வர்களின் கனவுகள், சமாதானச் சதிவலையில் சிக்கிச் சாவதை இன்னும் அனுமதிப்பதா? எமது வீர வரலாறும், போர்க்களவீச்சும் அகிலமே அறியும். அந்த அர்ப்பணிப்புகள் கற்பனைக் கதைகள் அல்ல. பெற்றெடுத்த வீரப்புதல்வர்களின் உன்னதப் போரும், உலகம் வியக்கும் அரசியல் போக்கும் அறிந்த நாம் இனியும் பேரினவாதிகளுடன் பேரம் பேசுவதா? போர் தவிர்ந்த சமாதானம் பேசுவது வீண் என்பது விளங்கவில்லையா? தமிழீழத் தமிழர் நாம் விடுதலைப்புலிகள் என யார் அறியார்? தமிழ் மக்கள் அனைவரும் புலிகளே!

தமிழீழத்தமிழர்களின் உலகப்பெயர் தமிழீழ விடுதலைப் புலிகள். தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆணைக்காக இன்று நாம் காத்திருக்கும் நிலை. பொறுமைக்கும் இங்கு ஓர் எல்லை. - காத்திருக்கிறோம்;தலைவர் சொல்லுக்காக.

எமக்கு நீதியான தீர்வினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது சர்வதேசத்தின் மனிதக் கடமை. அதில் சர்வதேசம் தவறும் பட்சத்தில் நாம் எதுவித அச்சமுமின்றி எமது தலைவர் பின்னால் அணி திரள்வோம். மக்கள் படையணி போரிடும் போரிலே எமது இருப்பையும், வாழ்வையும், எமது வாழ்வுக்கான மண்ணையும் காப்போம். இருப்பினும், இழப்போ, இறப்போ இனியும் என்ன யோசிக்க இருக்கின்றது? ஒன்றுமே இல்லை. ஒரு முடிவு தான். இறுதி முடிவு.அது தான் மக்கள் படையணி. புலிப்படை மண் காக்கும், மானம் காக்கும், வாழ்வு அமைக்கும், தமிழீழம் காணும், தரணியெங்கும் போற்றும்.

சர்வதேசமே! சர்வதேச மக்களே! ஸ்ரீ லங்கா அரசே! யுத்தமின்றி சாத்வீகமான முறையில் கௌரவமான தீர்வுக்கே இன்றுவரை, இந்த நிமிடம் வரை காத்திருக்கின்றோம். எமக்குள்ள துடிப்பையும், உணர்வையும் புரிந்துகொண்டு எமக்குரிய தீர்வை தரத்தவறினால் தமிழ் மக்களாகிய நாங்கள் எமது தேசியத் தலைவரின் வழியிலே, வழிகாட்டலிலே எமது தீர்வினைப் பெற்றுக் கொள்ள தயாராகி விட்டோம் என உறுதி எடுத்துக் கொள்கின்றோம்.

மரபுவழித் தாயகம், தேசிய இனம், சுயநிர்ணய உரிமை, எமது இறையாண்மைக்கான போராட்டம் என்பவற்றின் அடிப்படையில் எம்மையும், எமது போராட்டத்தையும் அங்கீகரிக்குமாறு சமாதானத்தை விரும்புகின்ற அனைத்து சர்வதேசத்தையும், சர்வதேச நாடுகளையும் கேட்டுக்கொள்கிறோம்.

இதன் பின்பும் சர்வதேசம் ஏற்றுக்கொள்ளவில்லையெனில் தலைவன் கூறியதுபோல் தரப்பட்ட கால அவகாசம் முடிவடைகின்ற நேரத்தில் விடுதலைப் போரை எங்கள் காவலன் சுட்டும் காலத்தில் இணைந்து நடத்துவதற்குத் தயார்.எங்களை வாழ விடுங்கள். இல்லையேல் எமது வழியில் விடுங்கள்.

- இப்படி பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க - 3)

## தசாக கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

கடந்த 03.01.2006 இல் அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி

திருமதி

**பட்டம்மாள் கல்யாணசுந்தரக்குருக்கள்**


அவர்களின் ஆன்ம ஈடேற்றக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவுள்ளன.

தசாகம் 12.01.2006 வியாழக்கிழமை பகல்10 மணி கிருகயக்ஞம் 15.01.2006 ஞாயிற்றுக்கிழமை மேற்படி கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் 15.01.2006 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கீத வித்வான்
க.இராமநாதன்
சக்கலாவத்தை,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

(42774) (18-12-45) -குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



விதானையார் வீதி, சுண்டுக்குழியைச் சேர்ந்த

அமரர்

**பஞ்சாட்சரம் ஸ்ரீபாலன்**

(யாழ். மாநகரசபை வாகனப்பகுதி திருத்துநர்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வாகனப்பகுதி உத்தியோகத்தர், ஊழியர்கள், வாகனப்பகுதியினர்.**

யாழ்.மாநகரசபை. (45241)(18-12-45)

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு நடராசா



காரைநகரைப் பிறப்பிடமாகவும் இல.50, கல்லூரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவன்கோயிலடி மார்க்கண்டு நடராசா அவர்கள் நேற்று (10.01.2006)செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**தீபசோதி(மனைவி), பிள்ளைகள்.**

இல 50, கல்லூரி வீதி
யாழ்ப்பாணம்.
(45253) (18-12-45)

## சக்சஸ் மல்ரி ஹவுஸ்

6 ஆவது அதிர்ஷ்டலாபச்
சீட்டிழுப்பு முடிவு
இல.348
பெயர்- வ.துவூளசிகா
முகவரி-புத்தூர்ச்சந்தி,
மீசாலை

புத்தூர்ச் சந்தி,
மீசாலை.

**S.M.H.**
**உரிமையாளர்.**

(கி-47313) (18-12-45)

## மனோகரா யாழ்ப்பாணம்



இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சூர்யா, த்ரிஷா, வடிவேல் நடித்த
**ஆறு**
தினசரி: பு.நே. 10.30, 1.30, 4.30, 7.30,10.30

அதிரடி பொங்கல் வெளியீடு
(Dts நவீன ஒலிநயத்துடன்) **ஆதி**
இளைய தளபதி விஜய், திரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : ரமணா
தினசரி: பு.நே.10.30, 1.30, 4.30, 7.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

## நாகம்ஸ் சுன்னாகம்

சிலம்பரசன் நடித்த
**தொட்டி ஜெயா**
தினசரி: புதியநேரம் 10.30, 2.30, 5.30

## நாதன்ஸ் யாழ்ப்பாணம்




அர்ஜுன், நமிதா, வடிவேல்
**ஆணை**
காட்சி நேரம்:
10.30, 2.00, 5.15, 8.15
எமது மகத்தான பொங்கல் வெளியீடு அல்டி மேட் அஜித் லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்

## ராஜா யாழ்ப்பாணம்

உங்கள் சத்தியராஜ் (இருவேடம்) சங்கவி,ஆனந்தராஜ் நடித்த
**அய்யர் I.P.S**
காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.00 மட்டும்
பொங்கல் வெளியீடு -சிம்பு, ஜோதிகா, விவேக் நடித்த
சரவணா

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி சுப்பிரமணியம்



யாழ்ப்பாணம், கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி சுப்பிரமணியம் (இளைப்பாறிய இறைவரிப்பரிசோதகர், யாழ் மாநகரசபை) அவர்கள் 09.01.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி-விசாலாட்சி தம்பதியரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் -நாகம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சொர்ணம், நாகரத்தினம் ஆகியோரது அன்புக் கணவரும் சுரேந்திரநாதன் (கனடா), புஷ்பராணி (கனடா), கதிர்காமநாதன் (நோர்வே), இந்திராணி ஆகியோரது அருமைத் தந்தையும் தவமலர் (இளைப்பாறிய அதிபர், கெருடாவில் தமிழ்க் கலவன் பாடசாலை), பரமேஸ்வரா (கனடா), பேரின்பவதி (நோர்வே), ஹரீந்திரன் (ஸ்ரீரங்கநாதன் றேடர்ஸ்- யாழ்., இராஜேந்திரா ஸ்ரோர்ஸ் -யாழ்.) ஆகியோரின் மாமனாரும் பத்மலதா, சுரேந்திரகுமார் (லண்டன்), பத்மகுமாரி, ஹேமகுமார் (கனடா), பிரேம்குமார் (கனடா), அஜினி (நோர்வே), யமினி (நோர்வே), ஹரிசன்(நோர்வே) ஆகியோரின் பேரனாரும், காலஞ்சென்ற நடராசா, இராசரத்தினம், சிவபாக்கியம் மற்றும் தங்கரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் அன்னாரது 22, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி இல்லத்தில் நாளை(12.01.2006) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல் :
**செ. ஹரீந்திரன் (மருமகன்).**

இல 22, ஆஸ்பத்திரி வீதி
கொட்டடி.
(45248) (18-12-45)

### பஞ்சாட்சரம் ஸ்ரீபாலன்

(யாழ்.மாநகரசபை தீயணைப்புப் பிரிவு ஊழியர்)



162, கனகரட்ணம் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் விதானையார் ஒழுங்கை சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட ப.ஸ்ரீபாலன் அவர்கள் 09.01.2006 திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் பஞ்சாட்சரம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் சாகிலதாவின் அன்புக் கணவரும் மகேந்திரம் - சீதாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் தேவதர்சன், ஜதுர்சன் , சபேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் றஞ்சிதமலர், வசந்தகுமாரி, பாலசரஸ்வதி (இத்தாலி), செல்வராணி, செந்தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வரதராசா (அருண் ஐஸ் கிறீம் - யாழ்.), சௌந்தரராஜன், நாகரட்ணம்( N.N.R. கூல்பார் - வவுனியா), பாஸ்கரன், காலஞ்சென்ற சோமு (இத்தாலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.01.2006) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**S.வரதராஜா.**

விதானையார் ஒழுங்கை,
சுண்டுக்குழி.
(45249) (18-12-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற

# கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்திற்கு தமிழ்க் கூட்டமைப்பு அழைக்கப்பட்டதா?

## ஆம் என்கிறது அரசு; இல்லை என்கிறார் இரா.சம்பந்தன்

கொழும்பு, ஜன.11

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காண்பது தொடர்பாக ஆராய்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அலரி மாளிகையில் கூட்டியிருந்த சர்வகட்சி மாநாட்டுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு அழைப்பு அனுப்பப்பட்டதா?

இந்த விடயம் இப்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

தங்களுக்கு அழைப்பு அனுப்பப்படவேயில்லை என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் அடித்துக்கூறுகின்றார்.

ஆனால், அரசுத்தரப்போ இல்லை, இரா. சம்பந்தனுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது என்று சாதிக்கின்றது.

இந்தக் கூட்டத்திற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைக்கப்படவேயில்லை என்ற தகவலை அதன் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தனை மேற்கோள்காட்டி 'உதயன்' நேற்று பிரசுரித்தது.

நேற்று தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, ஊடக அமைச்சில் சந்தித்தபோது அச்செய்தியை மறுத்துரைத்தார்.

கட்சித் தலைவர்களின் சந்திப்புத் தொடர்பாக ஆளுங்கட்சிப் பிரதம கொறடாவின் அலுவலகம் மூலம் கட்சித் தலைவர்கள் அழைக்கப்பட்டனர். அழைப்பு விடுக்கப்பட்ட கட்சித் தலைவர்களின் பெயர்களும், தொடர்புகொள்ள முடியாமல்போன கட்சித் தலைவர்களின் பெயர்களும் அடங்கிய பட்டியலை ஊடக அமைச்சர் பிரியதர்சன யாப்பா நேற்றைய சந்திப்பின் போது கையில் வைத்திருந்தார்.

அழைப்புக் கிட்டாத கட்சித்தலைவர்களின் பெயர்ப் பட்டியலில் இரா.சம்பந்தனின் பெயர் இருக்கவில்லை. கூட்டம் பற்றிய தகவல் தெரிவிக்கப்பப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலில் இரா.சம்பந்தனின் பெயர் இருந்தது.

ஆகவே, அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது என்றும்-

உதயனில் வெளியான செய்தி தவறு என்றும் - ஊடக அமைச்சர் பிரிய தர்சன யாப்பா சாதித்தார். இது குறித்து நேற்று மாலை இரா.சம்பந்தனுடன் தொடர்புகொண்டு கேட்டோம். ''எனக்கு அழைப்பு விடுவிக்கப்படவில்லை. இது தொடர்பாக அழைப்பு எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவரான என்னுடன் தொடர்புகொள்வதற்கு அரசுக்குப் பல வழிகள் உள்ளன. பல ஆள்களும் உள்ளனர். எனவே, மேற்படி கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு வருமாறு எமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதை மீண்டும் - தெளிவாக - உறுதிப்படுத்த விரும்புகிறேன்'' - என்றார் சம்பந்தன். (க-3)

# உள்ளூராட்சித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

மாகாணசபை, உள்ளூராட்சி அமைச்சில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர்களான ஜனக பண்டார தென்னக்கோன், டியூ குணசேகர, தினேஷ் குணவர்தன, தேர்தல் திணைக்களப் பிரதி ஆணையாளர் சுமண சிறி, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர். உள்ளூராட்சி சபைத் திருத்தச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம் சமர்ப்பிப்பதென இங்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 53 உள்ளூராட்சி சபைகளுக்கென 2002 ஆம் ஆண்டு வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தன. ஆனாலும், அங்கு நிலவும் பாதுகாப்பு நிலையைக் கருத்தில் கொண்டு அவசர காலச் சட்டத்தின் கீழ் கடந்த மூன்று வருடங்களாக தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தவர்களில் 22 வேட்பாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பெருமளவிலான வாக்காளர்கள் இடம் பெயர்ந்தும், வெளிநாடுகளுக்குச் சென்றும் அகதி முகாம்களில் வாழ்ந்தும் வருவதால் இவற்றைக் கருத்தில் கொண்டு முன்னதாக ஏற்கப்பட்ட வேட்புமனுக்களை ரத்துச் செய்ய புதிய சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளர் ஆலோசனை வழங்கியிருந்தார்.

இதற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் மேற்படி வேட்பு மனுக்கள் ரத்துச் செய்யப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து புதிய வேட்பு மனுத்தாக்கல் தொடர்பான விவரங்களைத் தேர்தல் ஆணையாளர் அறிவிக்கவுள்ளார். அதேசமயம், அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களையும் ஏப்ரல் மாதத்தில் ஒரே தினத்தில் நடத்துவதற்கு அரசு தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது. (க-3)

# புலிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான பயங்கரவாதிகளென்பதை உலகிற்கு உணர்த்தும் வகையிலும் அனைத்து அரசியற் கட்சிகளும் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட வேண்டுமென்று ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் இந்தக் கூட்டத்தில் கேட்டுக்கொண்டார். ஆனாலும், ஜனாதி பதி உட்பட கட்சித் தலைவர்கள் பலர் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அமைதிப் பேச்சுக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் தற்போதைய நிலையில், இவ்வாறான அறிக்கைகள் வெளியிடுவது உகந்ததாக இருக்காதென்று ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது திட்டவட்டமாகக் கூறினார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

# இளவாலையில் இளைஞன் கடத்தல்

இளவாலைப் பகுதியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்தப்பட்டார் என்று அவரது உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இளவாலை பிரதான வீதியைச் சேர்ந்த தனியார் சிற்றூர்தி சாரதியான செபஸ்தியாம்பிள்ளை பிலிப்ரூபன் (வயது 24) என்ற இளைஞனே நேற்றுமுன்தினம் இரவு அவரது வீட்டில் வைத்துக் கடத்தப்பட்டார் என முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3-6-190)

# பல்லாயிர....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றும் வைபவம் இடம்பெற்றது. கரும்புலி மேஜர் ஜெயம் அவர்களின் தாயார் துணைநாயகம் வாகேஸ்வரி ஈகச்சுடரை ஏற்றினார். இந்நிகழ்வினைத் தொடர்ந்து தமிழீழ மண்மீட்புக்கோரி உயிர்நீத்த மாவீரர்களுக்கும், அதன்பால் உயிரிழந்த பொதுமக்களுக்கும் அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தலைமை உரையை பொன். இரத்தினசிங்கம், வரவேற்புரையை வ.செல்வநாயகம், சிறப்புரையை தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் விக்கினேஸ்வரனும், ஆசியுரையை மதகுருமார்களும் நிகழத்தினர்.

இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் உட்பட விடுதலைப் புலிகளின் மாவட்டத் தளபதிகள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஈச்சிலம்பற்று, வெருகல், கதிரவெளி, மூதூர் கிழக்கு ஆகிய இடங்களிலிருந்தும் பெருந்திரளான மக்கள் இந்நிகழ்வில் உணர்வுபூர்மாகக் கலந்துகொண்டனர். நிகழ்வு நடைபெற்ற மைதானம் தோறும் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு மைதானமே ஒருவித எழுச்சிக்கோலத்துடன் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-3)

# தணிக்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேவேளை, இறுதியாக நடந்த பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில் வடக்கு - கிழக்கில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக கருத்துகளை வெளியிடுவதை படையினர் தவிர்த்துக்கொள்ளவேண்டுமெனக் கேட்டார் எனத் தெரியவருகிறது.

மோதல் தொடர்பான செய்திகளை வெளியிடுவதைக் கண்காணிப்பதற்கும், அதற்குரிய அனுமதியை வழங்குவதற்கும் தணிக்கைச் சபை ஒன்றை அரசு நியமிக்கக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் தலையில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக, அந்த மாணவர்களின் சடலங்களின் முகப்பகுதி, சூட்டுக்காயங்கள் அப்பட்டமாகத் தெரியக்கூடியதாக 'சுடர் ஒளி'யில் முன்பக்கத்தில் வர்ணப்படங்களைப் பிரசுரித்திருந்தது. இது அரச உயர்மட்டத்தைச் சீற்றத்தில் ஆழ்த்தியிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தணிக்கையை நடைமுறைப்படுத்துவது பற்றிய யோசனை எழுந்ததற்கு இந்தப்படங்கள் பிரசுரமானதும் ஒரு காரணம் என 'சுடர் ஒளி' மீது குற்றம் சுமத்தின அந்த வட்டாரங்கள்.

மேற்படி மாணவர்கள் ஐவரும் அவர்கள் கையாண்ட கிரனேட் வெடித்தே உயிரிழந்துள்ளார்கள் என்று, அந்த மரணங்கள் சம்பவித்து 36 மணி நேரத்துக்குப் பின்னரும் அரச பாதுகாப்புத்துறை விடாது வாதித்துவந்த நிலையிலேயே, தலையில் துப்பாக்கியால் சுடப்பட்டே அவர்கள் ஐவரும் படுகொலை செய்யப்பட்டனர் என்பதை அம்பலப்படுத்துவதற்காக அந்தப்படங்களை பிரசுரிக்கவேண்டிய நிலைக்கு 'சுடர் ஒளி' தள்ளப்பட்டது என்பதும் -

இத்தகைய அடிக்குறிப்புடனேயே அப்படங்கள் 'சுடர் ஒளி' யில் பிரசுரமாகின என் பதும் - குறிப்பிடத்தக்கவையாகும். (க-3)

# சிறுமியை படையினர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது:-

பச்சைநிறப் பஞ்சாபியுடன் சென்ற சிறுமி ஒருத்தியை இராணுவத்தினர் இழுத்துச்சென்றதை தாம் கண்டார் என அந்த வீதி வழியே பயணித்த ஒருவர் பொதுமக்களிடம் தெரிவித்திருக்கிறார்.

அவ்வீதி வழியே வந்த - வாய்பேச முடியாத - மற்றொருவரும் இதனைக்கண்டு தாம் அந்த இராணுவத்தினருடன் முரண்பட்ட போது அவர்கள் தம்மைத் தாக்கினர் என்று கைகள் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவித் திருக்கின்றார்.

இதனால், அப்பகுதியில் பொது மக்கள் கூடிவிட்டனர்.

சிறுமியை இழுத்துச்சென்ற படையினர் சிறுமியைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்து சடலத்தை ஒளித்திருக்கலாம் என்று பொதுமக்கள் கருதியதால் அங்கு பெரும் பதற்றநிலையும் குழப்பமும் ஏற்பட்டன.

யாழ். பிரதேச செயலாளர், யாழ். மேலதிக நீதவான், அரசாங்க அதிபர், மனித உரிமை கள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினர் எனப்பல தரப்பினருக்கும் அறிவிக்கப்பட்டது. போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் தெரிவிக்கப்பட்டதால் அவர்களும் அங்கு விரைந்தனர்.

இதனையடுத்து சிறுமியைத் தேடி அப்பிரதேசத்தில் உள்ள பற்றைக்காடுகள், பாழங்கிணறுகள் போன்ற பகுதிகள் எல்லாவற்றையும் அங்கு திரண்டிருந்த பொதுமக்கள் சல்லடை போட்டனர்.

அப்படித் தேடுதல் நடத்தியோர் அப்பகுதியில் - கோண்டாவில் சந்திக்கு அண்மையில் - உள்ள இராணுவ முகாமை ஒட்டிப்பின் புறத்தில் உள்ள பற்றைக்காட்டையும் துழாவினர். அச்சமயம் அந்த முகாமிலிருந்த படையினர் துப்பாக்கிப்பிரயோகம்செய்து தேடுதல் நடத்திய பொதுமக்களை விரட்டிக்கலைத்தனர். அவ்வேளை அப்பகுதியில் கண்காணிப்புக் குழுவினரும் காணப்பட்டனர்.

திடீரெனத் தீர்க்கப்பட்ட வேட்டுக்களால் பீதியடைந்த மக்கள் பற்றைக்காட்டுப் பகுதியிலிருந்து விழுந்தடித்து ஓடித்தப்ப முயன்றனர். அப்போது பற்றை முள்ளுகளில் சிக்கியும், விழுந்தும் பலர் காயமடைந்தனர்.

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை சம்பந்தப்பட்ட சிறுமி யார் என்பது குறித்தோ, அச்சிறுமி பற்றிய தடயங்களோ அங்கு கண்டுபிடிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (க-3-49-86-139)


புதியவகுப்புகள்
உங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தில் சிறப்படைய ஆங்கிலமொழிமூல பாடநெறி
ENGLISH MEDIUM Gr: 6.7
தகுதிவாய்ந்த ஆசிரியர்களின் சிறப்பான வழிகாட்டல்
ஆரம்பம் : சனி காலை9மணி
NALLUR SCIENCE ACADEMY
8.9.10 ENGLISH LITERATURE
ஆசிரியர்கள:P.N.சுதர்சன்.மதன்
ஆரம்பம் :வெள்ளி 6.30am
ARIYALAI SCIENCE ACADEMY

CHEMISTRY CENTRE
Temple Road. (Green Park முன்னே)
A/L 2008
ஆரம்பம் : 11.01.2006 4.00 p.m.
Wed., Thurs., Fri. 4.00 p.m.
By : அன்பழகன் B.Sc.

YARL PERSONAL CLASSES
YPC யாழ். பிரத்தியேக வகுப்புகள்
இல.01, கனகரட்ணம் வீதி, அரியாலை.
A/L 2008 ஆரம்பம் - 11.01.2006 புதன் காலை 11 மணி
பொருளியல் Eco. - G.P. தீபன்
GENRAL ENGLISH - Y.JASANTHINI
வணிகபுள்ளி Bu.Stat - P.மதி
தமிழ் TAM - V.ஜெயபால்
கணக்கீடு ACC - T. தவேந்திரன்
வணிகக்கல்வி Bu.Std - V.K.ரவிகரன்
புவியியல் GEO - J. ஜெயகணேஷ்
இரசாயனவியல் CHE - M.A.நிரேஜன்
பௌதிகவியல் PHY - K.P.S.விஜயன்
A/L 2007 இற்கு புதிய அலகுகள் ஆரம்பம்
அமைதியானதும் தற்கால தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதான சூழல்

விக்னா கல்வி நிறுவனம்
புவியியல்
திரு பாபு
A/L 2007
கேப்பனின் காலநிலை
பிரிவு I 10.30 / பிரிவு II 11.30 SAT., SUN.
A/L 2006
உலகின் கைத்தொழில்கள்
SAT, SUN 9.30
A/L 2006 DAY
வரைபடங்கள்
MON., FRI. 11.30 - 1 p.m.
(45235)

NIRU
TUITION CENTRE
KONDAVIL
IN ORGANIC CHEMISTRY
A/L 2007
N.மகேஸ்வரன்
12.01.06 வியா.
4.30 மணி
(45213)

கல்வி அமைச்சின் ஆவண உதவியாளர் பதவிக்கான கருத்தரங்கு தொடர் வகுப்புகள்
50 மணி
11.01.06 இன்று மாலை 3 மணி
அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்
திகழ் கல்வி நிறுவனம்
இணுவில்
O/L சித்தியடைந்த எவரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும் விபரம்- நேரில்

A/L 2007, 2008
வர்த்தகப் பிரிவுகள்
ஜனவரி - 12, 3மணி (O.T)
Acc - தவா
B.st - சான்சிநாதன்
Eco - சண்
GAQ B.A (யாழ். பேராதனை) விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன
திகழ் கல்வி நிறுவனம்
கே.கே.எஸ் வீதி இணுவில்
(45210)

COLLEGE OF ENGLISH
பிரவுன் வீதி
Spoken English with Grammar
MR.T.THANENDRAN
புதிய பிரிவுகள்
Thu., Fri. I 4.30, II 5.30
Sat., Sun. III 3.30, IV 4.30

AAC 66, வைரவர் கோவில் வீதி, அரியாலை
கலை, வர்த்தக, விஞ்ஞான, கணித பிரிவுகளுக்கு
A/L 2008
ஆரம்பம்: 20.01.2006
வெள்ளி மாலை 5 மணி
A/L 2007 இற்குரிய புதிய அலகுகள் ஆரம்பம
தரம் 4 முதல் O/L வரை சகல பாடங்களும் சிறப்பாக நடைபெறுகின்றன


EXPOAIR your friend in the skies...
எக்ஸ்போ எயார் வானத்தில் உங்கள் நண்பன்...
தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.